# செந்தமிழ்

தொகுதி 88 | செப்டெம்பர் 94 | பகுதி 3

காலாண்டு இதழ்

ஆசிரியர் மா. தனுக்கோடி பாண்டியன் பி.ஏ.,பி.எல்.

**மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை-1.**

பொறுப்பாசிரியர் : பேராசிரியர் பேரறிஞர்

**நா. பாலுசாமி** எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.,பி.எச்.டி.,பி.எட்.

# பொருளடக்கம்

பக்கம்

1. பொழுதும் திணையும்-புதியபார்வை
கானகர், ச. பாலகதிரேசன் 1

2. நெடுநல்வாடையில் பிறழ உணரப்பட்ட 'நல்'
பேரறிஞர் எஸ். சௌந்தரபாண்டியன் 12

3. வள்ளல் பாண்டித்துரைச்சாமித்தேவர் வாழ்த்துப்பா
கவிஞர் சங்கரலிங்கம் 14

4. குமரகுருபரரும் சைவசித்தாந்தமும்
பேரறிஞர் ந. கந்தசாமி 15

5. இராமனின் முற்பயணம்
பேரறிஞர் வ. குருநாதன் 22

6. மூவர் தேவாரங்களில் தமிழ் உணர்வு
பேரறிஞர் தா. ஈசுவரபிள்ளை 36

7. மதுரைத் தமிழ்ச்சங்கச் சுவடிகள்
கி. ஜெயக்குமார், மொ. மருதமுத்து 39

8. பாரதப்பெருமையில் சேதுபதிகள்
முகவை நா. தினகரசாமி 44

# பொழுதும் திணையும் - புதிய பார்வை

—கானகர். ச. பாலகதிரேசன்

(முன் இதழ்த் தொடர்ச்சி)

வெம்மை மிகுவேனிலை விரட்டிவிட்டு நல்லின்பம் நயக்கவரும் காலமழையாம் 'கார்' மழையைச் சங்கப்புலவர் ''ஆர்பெயல் (1)'' ''இருபெயல் (2)'', ''கருவிவானம் (3)'', ''கருவி மாமழை(7)'', ''கமஞ்சூல் மாமழை (5)'', ''கனைபெயல்(6)'', ''கார்மழை(7)'', ''காலமாரி (8)'', 'தன்பெயல் (9)', 'துள்ளுப்பெயல் (10)', 'படுமழை(11)', ''பரூஉப்பெயல்(12)', 'பெரும்பெயல் (13', ''பெருமழை (14)'', ''வண்பெயல் (15)'', ''வளமழை (16)'', 'வார்பெயல் (17)', எனப் பல்வேறு அடைமொழிகள் பெய்து அக மகிழ்ந்துள்ளனர்.

கார் மழையைக் கனிவுடன் களிப்புடன் வரவேற்கும் சங்கப் புலவர்கள் கார் மழை வருகின்ற திசை, பொழிகின்ற வகை பற்றி இற்றை நாள் வானியற் கொள்கைகட்கேற்ப அன்றே பாடியுள்ளமை நினைதொறும் நெஞ்சம் பெருமிதங் கொள்ளச் செய்கின்றது.

''கடல் முகந்த கமஞ்சூல் மாமழை
பொறுத்தல் செல்லாது இறுத்த வன்பெயல்', (நற். 99)
''அகலி ருவிசும்பகம் புதையப்பா அய்ப்
பகலுடன் சுரந்த பல் கதிர்வானம்
இருங்களிற்றின நிரை குளிர்ப்பவீசி
பெரும்பெயல் அழி துளி பொழிதல்'' (அக. 214)

---

அடிக்குறிப்பு : 1. அக. 314, 2. அக. 274, 3. அக. 4, ஐங். 476 488, 4. குறு. 94, நற். 238, 5. அக. 134, நற். 99, 6. அக. 114, 7. ஐங். 484, அக. 14, 8. குறு. 251, 9. அக. 74, 10. அக. 294, 11. அக. 154, 12. அக. 304, 13. அக. 214, 14 அக. 364, 15. அக. 124, நற். 99, 16. அக. 344, 17. அக. 324.

''இருவிசும்பதிர முழங்கி அரநலிந்து
இருபெயல் அழிதுறி தலைஇய'' (அக.274]

''மங்குல் மாமழை விண் அதிர்பு முழங்கித்
துள்ளுப்பெயல்'' (அக.294)

''சூர்பனிப்பென்ன தண்வரல் ஆலியொடு
பருஉப்பெயல் அழிதுளி தலைஇ வான்நவின்று
குரூஉத்துளி பொழிந்து'' (அக304)

''நீலத்தன்ன நீர்பொதிகருவின்
மாவி சும்பதிர முழங்கி ஆவியின்
நிலந் தண்ணென்று கானங்குழைப்ப'' (அக.314]

''கழல் குரல் ஆலியொடு கதழுறை சிதறி'' (அக.334]

''மாதிரம் புதையப் பாஅய்க்கால் வீழ்ந்து
ஏறுடைப் பெருமழை பொழிந்த'' (அக.364)

''ஆர்குரல் எழிலி அழிதுளி சிதறிக்
கார் தொடங்கின்றால்'' (ஐங்.411)

''மாமழை இடியூத்தளி சொரிந்து'' (ஐங்423)

''ஆலித்தண் மழை'' (ஐங்437)

எனும் பாடல் வரிகளால் ''கடல் முகந்து'' ''ஏறு'' எனும் இடி ''அதிர முழங்கி'' ''ஆலி''யொடு நிலம் தண்ணென்று குறிர்ப்பவும் ''புதையவும்'' பொழிவதைக் காண வியலுகின்றது. தென்மேற்குப் பருவமழை இந்துமாக்கடல் மற்றும் அரபிக்கடல் நீரினை முகந்து இன்றைய தமிழகத்தின் மேற்குப்பகுதியில் ஒரு புகுதியையும் அன்றைய தமிழகத்தின் சேரர் பகுதியான மேல மலைத்தொடரின் கிழக்குப்பகுதியையும் ''விசும்பதிர முழங்கி'' ஆலித் தண் மழை''யாக'' ''நிலம் புதையக் கால் வீழ்ந்து கானந் ''தண்ணென்று குழைய'' வீசுதலை இன்றும் கண்டுணரலாம்.

தென்மேற்குப்பருவ மழைதான் சங்க காலத்தில் கார் மழை என உறுதி செய்வதற்கு ஆழ்கடல் முத்தெனக் கிடைத்த சங்கப் பாடல் மருதத்திணைப் பாடலுள் கலித்தொகையில் ''மருதக் கலியில் வரும் 17ம்பாடலாக மருதனிள நாகனார் பாடிய அற்புதப் பாடலாகும். மருத நிலத்தலைவி ஒருத்தி அண்மையில் ஓர் ஆண் மகவைப் பெற்றுப் பாலூட்டி வரும் நிலையிலுள்ளவள். ஆனால் அவளின் புதல்வனைத் தோழி எடுத்து சென்றுவிட்டு,

காலந்தாழ்த்தித் திரும்ப அழைத்து வருகின்றாள். மகவு பாலுண்ணும் காலம் கடந்து விட்டதால் பாலூட்டுந்தாயினால் சுரக்கின்ற பாலைக்கட்டுப்படுத்த இயலாது தவிக்கின்ற தன்மைக்கு எடுத்தாளப்படும் உவமை என்னவெனில், உலகின் வெம்மையாலேற்பட்ட வறண்ட நிலை மாற கிழக்குத்திக்கு நோக்கி காலத்தில் வருகின்ற கருமேகம் ஆகும். ''ஞாலம் வறம் தீரப்பெய்யக் குணக்கேர்பு காலத்தில் தோன்றிய கொண்மூப் போல, எம்முலை பாலொடு வீங்கத் தவ நெடிதாயினை'', என்பதாகும் அப்பாடல். தென் மேற்குப்பருவமழை தென் மேற்கிலிருந்து இந்துமாக்கடலில் முகந்து வடகிழக்காகக் கிழக்கு நோக்கி ஏறி, திரண்ட மேகங்களாய் வந்து நற்றிணை 99ம் பாடலில் புலவர் இளந்திரையனார் கூறியவாறு ''கடல் முகந்த கமஞ்சூல் மாமழை பொறுத்தல் செல்லாது இறுத்த வண்பெயலா''கப் பொழிவதாகும்.

இனி, முன்னர்ச்சுட்டியவாறு, நிலையுயிர்களின் வளர் பருவ வெளிப்பாடுகள் எக்காலத்தும் மாறாதிருந்து அந்தந்தப்பருவ காலத்தைச் சுட்டி நிற்பன எனும் அறிவியற் கொள்கையடிப்படை கொண்டு ஆய்ந்தால் 'கார்' காலத்தில் வளர் பருவ வெளிப்பாடுகளைக் காட்டி நிற்கும் சில நிலையுயிர்களை 'கார்' மழைப்பாட்ல்கள் வழி பட்டியலிடலாம். கால மழையாய் ''கார்'' மழை (தெ. மே. பருவமழை) பெய்ததும் ''பிடவு'' முகை தகைந்ததாம் (ஐங். 461) 'பைங்கொடி முல்லை பருவஞ்' செய்தனவாம் (ஐங். 476) ''காயா, கொன்றை, நெய்தல், முல்லை, போதவிழ் தலைமொடு பிடவு அலர்ந்து கவினி பூவணி'' சொண்டதாம் புறவு (ஐங். 412). அது மட்டுமோ? மலர்வனவற்றின் வண்ணங்களையும் குறிப்பிட்டு அன்று சொன்னவற்றை இன்றும் ஐயமின்றிக்கண்டு கொள்ள வகை செய்கின்றனர் நூல் தொகையறிந்த சங்கப் புலவர் பெருமக்கள். 'பொன்னென' மலர்ந்ததாம் கொன்றை (ஐங். 420). அக்கொன்றையின் மஞ்சள் வண்ணப்பூக்கள் 'கிண்கிணிக்காசுகள் போன்ற உருவம் கொண்டனவாம் (குறு. 148) ''மணியெனத் தேம்படு'' காயா மலர்ந்ததாம் (ஐங்.120). அஃதாவது நீல மணி போன்ற மலருடையதாம் காயா. (செடி நூற்படி காயாஞ்செடியின் மலர் நீல வண்ணமும் உருவம் கோவில் மணி போன்று (BELLSHAPED) இருப்பதாகும்). அதனை அன்றே ''மணி'' யெனுஞ் சொல்லால் அதன் உருவத்தையும் ''செறியிலைக் காயா அஞ்சன மலர்'' (முல்லைப்பாட்டு 96ம்வரி) எனுந்தொடரால் ''அஞ்சன'' என்னும் சொல்லால் கருநீல வண்ணமும் குறிக்கப்பெற்றுள்ளன, இது

நினைந்தின்புறற்பாலது. தோன்றிச் செடியில் குருதிபூப்பச் செந் நிறம் பொருந்திய மலர்கள் பூத்தனவாம் (மு.பா.95வரி) ''துய்த்தலை இதழபைங்குருக்கத்தியோடு பித்திகை''யும் (நாற்.97) அஃதாவது மாதவிக் கொடியும். பிச்சிக் கொடியும் பூத்தனவாம். உண்ணும் பயிராம் வரகும் பூத்தணவாம் (''வரகினர்சிறப்ப'' ஐங். 496).

''மயிலடி'' புனையமாக்குரல் நொச்சியும் மனை நடு ''மௌவலும்'' மழைக்காலத்து மலர்கின்றனவாம் (நற்.115). நொச்சியின் இலை மயிலடி போன்று காணப்பெறுவது அறிவிய லுண்மையே.

மழையினால் மலர்கள்பூப்பதும் பூத்த மலர்களை வண்டுகள் மொய்ப்பதும் புற்றுகளில் ஈசல் புறப்படுவதும் இயற்கைதானே! அச்சிறு உயிரினங்கள் வெளிப்படுதலையும் புலவர் ஒளிப்படுத்திக் காட்டியுள்ளனர். ஐங்.487 ஆம்பாடலில் ''நெடுஞ்செம்புற்று ஈயல் பகர'' என்பதால் ஈசல்கள் வெளிப்படுதல் சொல்லப்பெறுகின்றது. ''பனிவளர் தளவின் சிரல்வாய்ச்செம்முகை''யை''ஆடுவண்டு'' அவிழ்த்ததாம் (ஐங்.447). இங்கே தளவத்தின் முகை சிவப்பாய் உள்ளதை ஒரு பறவையின் அலகின் நிறத்தை உவமையாய்க் காட்டுவது நனிசிறந்த அறிவியல் உண்மையாம். சிரல்'' எனக் குறித்தது இன்று ''மீன் கொத்தி '' என்றழைக்கப்பெறும் நீர்ப் பறவையாகும். அதன் அலகு பூமுகை போன்று கம்மிய உருவமும் செம்மண்நிறமும் உடையதாகும். ''தளவ''த்தின் முகை அப்பறவையின் அலகு மற்றும் அதன் நிறத்தை ஒத்துள்ளதைச் சொல்வதால் தளவச் செடியையும் ''சிரல்'' எனும் மீன் கொத்திப் பறவையையும் ஒரு சேர நம் கண்முன்நிறுத்தும் நுண்மாண் நுழை புலம் கைவரப் பெற்றவர் சங்கக்கவிஞர் என்பதற்குச்சிறந்த சான்று இப்பாடல். ஈசலும் வண்டும் வெளிப்படுவது மட்டுமன்றி ''மழைமேகங்கண்டால் ஆடும் மயில்'' எனும் வழக்கினை ''நறுந் தண்புறவில் நின்னே போல மஞ்ஞையாலக் கார் தொடங்கின்றே'' என மயில் ஆடுவதை, அகவுவதை ஐங்,413ஆம் பாடல் படம் பிடிக்கும். மேலும் மழை வந்தால் மகிழும் சிற்றுயிரினங்களான தவளையும், தேரையும் மகிழ்வதை ''வரிமணல்தறங்கத்தேரை தெவிட்டக் கார் தொடங்கிற்றே'' என ஐங். 468ம் பாடல் குறிப் பிடும். ஆக கொன்றை மரம் பூத்தலும், காயா, குருந்து, தோன்றி, நொச்சி பிடவம் போலும் குற்றுச்செடிகளில் மலர் மலர்வதும்

தளவம், பித்திகம், பீரம், முல்லை, மௌவல் போலும் கொடிகள் இணர்மலர் ஊழ்த்தலும் அலர்தலும், தென்மேற்குப்பருவமழைக் காலத்து இன்றும் உண்மை யென்றறியுங்கால், ''கார்கால மழைப் பாடல்கள் அறிவியலின் பால் ஒன்றியன என்பது நெல்லிக்கனியே.

நிலையுயிர்கள் கார் காலத்தில் பெறும் மகிழ்வுடன், வேனிலில் வறண்டிருந்த ஆறு, குளம் எல்லாம் புதுநீர் வரவு பெற்று அழ குறுவதை, ''வீழ்தரு புதுப்புனல் ஆடுகம்'' என வரும் ஐங். 411 பாடலும் ''கார் பயம் பொழிந்த நீர்திகழ் காலை'' எனும் அக நானூற்று பாடலும் (234) காட்டக்கண்டு மகிழலாம்.

இன்னொரு புதிய கருத்தும் இவண் முன் நீறுத்தப் பெறு கின்றது. என்னையோவெனின், வேனிலை அடுத்து கார்மழை, வருதலால் வெம்மைச்சூடு தணிந்து உயிரினம் நடுக்கமின்றி மகிழ் வதால், பின்வரும் ''வாடை'' மழையாலும் ''வடந்தைத்தண் வளியா''லும் மாவும் புள்ளும், மாந்தரும் நடுங்குவது பற்றிய சொற்குறிப்பு போன்று ஏதும் கார்மழைப்பாடல்களிற்காணக் கிடைக்கவில்லை யென்பதேயது. இதுவும் குறித்துக்கொள்ளுதற் குரியது.

இனி முல்லைத்திணைப்பாடல்களில் ''கார்'' மழை பற்றிய பாடல்களை ஆய்வு செய்யுங்கால், பிற திணைப்பாடல்களிலும் இதற்கொப்பவே ''கார்'' மழைப்பாடல்கள் காணப்பெறுகின்றன என்பதற்கு முன்னரே மருதக்கலிப்பாடல் (17) ஒன்று எடுத்துக் காட்டப்பட்டது, அது போன்று குறிஞ்சிதிணைப் பாடல்களில் ''கார்'' காலவருணனை பத்துப்பாடல்களில் காணக்கிடைக்கின் றது.

அகநானூற்றில்,

''விழுமழை கரந்து, கார்விரை கமழும்''
(அக.193)ம்

''மாரி வானந்தலைஇ நீர் வார்பெற'' (அக.128)ம்

''பல்பழப்பலவின் பயகெழு கொல்லிக்
''கார்மலர் கடுப்ப நாறும்'' (அக.208)ம்

''ஈங்கைத் துய்யவிழ்பனிமலர் உதிரவீசித்
தொழில் மழை பொழிந்த பானட் கங்குல்'' எனவும்
(அக.252)

கார் மழையைக் கூறுவதுடன், வேனில் வெம்மையாற் சுரிந்து கிடந்த மண், கார் மழை பொழிந்ததால் புது மணம் பெறுவதைக் ''கார் விரை'' கமழும் எனும் ஒரு சொல்லால் மண் மணக்கச் சொல்கிறது. அது மட்டுமன்று, முற்குறிப்பிட்ட நிலையுயிர்களோடு பலாக்கனியொடு திகழ்வதையும் ஈங்கைச்செடி பூப்பதனையும் சொல்லி பட்டியலை நீளச்செய்கின்றன, நற்றிணையில் ஐந்து குறிஞ்சித்திணைப்பாடல்களில் ''கார் மழை'' வருணனையை காணலாம்.

''வானுற நிவந்த பெருமலைக்கவாஅன்
ஆர்கலிவானம் தலைஇ நடுநாள்
கனைபெயல் பொழிந்தெனக் கானகக் கான்யாற்று
விருந்தின் தீம் நீர் மருந்து'' எனும் 53ம் பாடலும்

''கொடி நுடங்கு இலங்கின மின்னி
ஆடுமழை இறுத்தன்று ...... .......
பொங்கி வருபுதுநீர்'' எனும் பாடலும்

கானாற்றில் புதுவெள்ளம் வருவதைக்குறிப்பிடுகின்றது.

இதனை முன்னர்ச்சுட்டிய முல்லைத் திணைப் பாடல்களான ஐங்குறுநூற்றின் 411ம் பாடலுடனும் அக.234ம் பாடலுடனும் ஒப்பிட்டுக்காணலாம். நற்றிணையின் 61ம் பாடலாகிய ''பகுமழை பொழிந்த பாறை மருங்கில் சிரல்வாயுற்றதளவி'' எனும் பாடலை முன்னர் காட்டப்பெற்ற ஐங்.447ம் பாடலின் ''பனிவளர்தளவில் சிரல்வாய்ச்செம்முகை'' எனும் வரியோடு ஒக்க நிறுத்தி மகிழலாம். வேனிலில் பழுப்பது பலா. வேரிற்பழுப்பதும் அஃதே கானகத்தில் அதுபோழ்து பழுத்த கனிகள் ''கார்'' காலம் வரை கொய்யாமற் கிடந்து கானப்படுதலை

''அருவி ஆர்க்கும் பெருவரை நன்னி
கன்றுகால்யாத்தமன்றப் பலவின்
வேர்க்கொண்டு தூங்கும் கொழுஞ்சுளைப் பெரும்பழம்''

என் நற்றிணையின் 213ம் பாடலும்,

''பேரிசை உருமொடு மாரி முற்றி......
பலவுறுகுன்றம் போல் பெருங்கவின் எய்திய''

எனவரும்நற்றிணை 253ம் பாடல் காட்டுவதுடன் அகநானூற்றில் 208ம் பாடலுடன் ஒத்தமைகின்றது.

நற்றிணையில் 247ம் பாடலோ இரவில் கார்மழை பொழிந்து நின்றபின் மேகமாவது பனிமூட்டம் போல், வெண்பஞ்சுபோல காலையில் மலைச்சிகரத்தில் காணப்பெறும் அழகிய காட்சிதனை,

''அழிதுளி பொழிந்த இன்சூரல் எழிலி
எஃசிறு பஞ்சிற்றாகி, வைகறைக்
கோடுயர் நெடுவரை'' எனப்பாடிக் காட்டுகின்றது

இனி, பாலைத்திணைப் பாடற்பகுப்புக்குள்ளும் ''கார்'' மழைப்பாடல்கள் கானல் நீர்போல காட்சி தருகின்றன. ''கரிபரந்தனன் காயாவுடன்'' ''எரிமலர் இலவமும்'' ''முகைமுதில் வெட்சியும்'' கார் மழை பொழிந்த போது காட்சி தருகின்றனவாம். (அக.133). முல்லைக்குப் புறம் ''வெட்சி'' ஆகும். முல்லை மலருங்கால் ''வெட்சியும்'' பூப்பது இயற்கையே. ''பொன்வீக் கொன்றை'' பூத்தல் நற்றிணை 246. 296 மற்றும் 302ம் பாடல்களிலும், ''பிடவுத்தளை அவிழ்தல்'' நற்றிணை-246, மற்றும் 256ம் பாடல்களிலும், ''மாரிப்பித்திகத்து நிர்வார் பெருமுகை'' குறுந்தொகை 168ம் பாடலிலும் பொதிந்து கிடக்கின்றன.

இது காறும் ''கார்'' மழையென்று அன்றும் ''தென்மேற்குப் பருவமழை'' என இன்றும் வாங்கப்பெற்ற மழை பற்றி முல்லை, குறிஞ்சி, மருதம், பலைத்திணைப்பாடல் தொகுப்புகளிலிருந்து குறிப்புகள் பகுத்தெடுத்து ஆயப்பெற்றன. இனி, முல்லைத்திணைப் பாடல்களில் ''கூதிர்'' மழையாகிய வடகிழக்குப்பருவமழை பற்றிய பாடல்கள் பற்றிய ஆய்வும், அப்பாடல்கள் இயல்பாகக் குறிஞ்சித்திணையிலும் சிறப்பாகப் பிறதிணைகளிலும் வந்துள்ள கூதிர் மழைப்பாடல்களுடன் இயைபு பெற்று விளங்குகின்றன என்றதனாய்வும் தொடங்குகின்றன.

இற்றைநாள் வானியலார் கூற்றுப்படி வடகிழக்குப் பருவ மழைபெய் வகை பற்றி முன்னரே சுட்டிக்காட்டப்பெற்றது. அப்பருவமழையை திரும்பிவரு மழை (Retreating Monsoon) என் அழைப்பர். வடக்கே தென் மேற்கு பருவக்காற்றாய்ச் சென்று மழை பொழிந்து மீள அக்காற்றுத் தெற்கில் திரும்பி வங்கக்கடல் வழியாய் வரும் போது தமிழகத்தில் கிழக்குக்காற்றாய்ச் சுழன்று ''கொண்டல்'' ஆகவும் ''தென்புலம் படரும் வடந்தைத் தன் வளி'' யாகவும் இலக்கியத்தில் பேசப்படுகின்றது. ''திரும்பிவரும் மழை'' என்று இப்பொழுது கூறுவதை அன்றே சச்சீப்பேட்டு

நன்னாகையார் எனுஞ் சங்கப்புலவர் நெய்தல் திணைப்பாடல் ஒன்றில் தெள்ளத் தெளிவாகச் சொல்லோவியமாக்கிக் காட்டுதல் அக்காலப்புலவர்தம் தெள்ளிய அறிவியற்றிறத்தைத் தெற்றென விளக்குகின்றது.

''அவள் நெய்தல் நிலத்துத் தலைவி. கார்காலத்துத் தலைவனின் வருகையை எதிர்நோக்கி நின்றிருந்தவள். கார்காலமும் வந்து போய்விட்டது. கூதிர் காலமும் பிறந்து விட்டது. இரவு நேரம் வருகின்றது. காதலற் பிரிந்து வாடும் தலைவிக்கு இரவுக் காலமாகிய ''எற்பாடு'' மிக்க துன்பத்தைத் தரும் சிறுபொழுதாகும். இது நெய்தற்றிணைக்குரிய சிறுபொழுது என்பது இலக்கிய மரபு. ஆக இத்தகைய பொழுது நெருங்கியவுடன் வருகின்ற வாடைக்காற்று கூற்றத்தின் உருவில் வருகின்றதென்று மயங்கித் தன் தோழியிடம் வருந்துவதே அப்பாடலின் கருத்து.

''யாது செய்வாங் கொல்' தோழி—நோதக
நீர் எதிர் கருவிய கார் எதிர்கிளை மழை
ஊதையம் குளிரொடுபே துற்று மயங்கிய
கூதிர் உருவின் கூற்றம்
காதலற் பிரிந்த எற்குறித்து வருமே!'' (குறு 197)

என்பது அப்பாட்டு.

கார்காலத்து வந்து சென்ற மழை பின்னர் மயங்கி ''ஊதையம் குளிரொடு'' கூதிர் உருவில் திரும்ப வருகின்றது என்பது பின்புறச்செய்தி. அது Retreating, Monsoon எனச் சொல்லப்பெறும் திரும்பி வருமழையைத் திருத்தமாய்க் கூறுகின்றது. நெய்தற்கு உரிப்பெருளாகிய ''இரங்கல்'' பெருந்துன்பமாக மாறுதல் 'எற்பாடு' எனும் இரவு மயங்கும் நேரமாயினும் அச்சிறுபொழுது கூதிர்காலத்திலும், பனிக்காலத்திலும்தான் மிக்க துன்பத்தைத் தருவது இயற்கை. அதனைத்தான் மேற்கூறிய பாடல் காட்டுகிறது. வேறுசில நெய்தற்றிணைப்பாடல்களைப் பின்னர் நோக்கலாம்.

முல்லைத்திணைப் பாடல்களில் வடகிழக்குப்பருவ மழையாகிய கூதிர் மழையினைப்பாடும் பாடல்களாக 33 பாடல்கள் அமைகின்றன. முல்லைத் திணைக்குள் வருவதாகக் கொள்ளப்படும் பரிபாடலில் 20ஆம்பாடல் வெள்ளம் நிறைந்து வருகின்ற வையையை வருணிக்கின்றது. பாடல் வருமாறு:-

''கடல்குறைபடுத்தநீர் கல்குறைபட எறிந்து
உடல்ஏறு உறுமினம் ஆர்ப்பமலை மாலை
முற்றுபு முற்றுபு பெய்து சூல்சூர் முகில்
பொருதி கல் புலி போழ்ந்த பூறுதல் எழில் யானை
குருதி கோட்டு அழிகறை தெளிபெறக்கழீஇ யின்று.
காலைக்கடல் படிந்து காய் கதிரோன் போயவழி
மாலை மலை மண்ந்து மண் துயின்ற கங்குவான்
வானாற்று மழை தலைஇ மரனாற்று மலர் நாற்றம்
தேனாற்று மலர் நாற்றம் செறுவெயில் உறுகால
கானாற்றுக் கார்நாற்றம் கொம்புதிர்ந்த கனிநாற்றம்
தானாற்றம் கலந்துடன் தழீஇ வந்து தரூஉம் வையை''

அடுத்து ''நெடுநல்வாடை' தருஞ்செய்தியை ஆயுங்கால், உரையாசிரியர்களே அதனை 'முல்லைத்திணை'யாகக் கொள்ளாது ''பாலைத்திணை''யாகக் கொள்ளலாமா அன்றி அப்பாட்டுள் ''வேம்பு'' எனுஞ்சொல்லால் ஒருவர் பெயர் சுட்டியதாகக் கொண்டு பாலைத்திணையின் புறத்திணையாம் ''வாகைத்திணை'' யாய்க் கொள்ளலாமா என மயங்கியுள்ளனர். அது மட்டுமின்றி அதனுள்ள விவரிக்கப்பெறுகின்ற பாசறையைக் கதிர்ப்பாசறையென்றே கொள்கின்றனர்.

இனி ''கூதிர்'' மழையை வருணிக்கும் முல்லைத்திணை பாடல்களை ஆய்வுக்களத்துள் வருவிக்கும் பொழுது அவையும் வட கிழக்குப் பருவமழையை நினைவூட்டுவனவாக உள்ளன. அக நானூற்றில் 4 பாடல்களும் நற்றிணையில் இரண்டும் குறுந்தொகையில் ஒன்றும் அதற்குச் சான்று பகருகின்றன. வங்கக்கடலில் நீர்முகந்து, வலமாகச் சுழன்றேறி, மேற்கு நோக்கி மேகமலைத்தொடரை அடைந்து மழை பெய்வதுடன் நில்லாது தென்புலமாக வாடைக்காற்றாகவும் மழையாகவும் படர்வதை இப் பாடல்கள் ''மாக்கடல்முகத்து'' ''கொண்டலாற்றி'' ''பௌலந் தாங்கி'' எனும் தொடர்களால் வங்கக்கடலினின்று நீர் முகந்து வருவதையும், 'வலனேர்பு' 'முகடுகந்துஎறி' 'மாயோன் இருந்த தேஎம்நோக்கி' 'செழும்பல்குன்றம்நோக்கி' எனும் தொடர்களால், கடிகாரச் சுற்றுபோல இடமிருந்து வலமாக, கிழக்கிலிருந்து மேற்காக, தமிழகத்துள் நுழைந்து மேற்குமலைத் தொடரை அடைவதையும், அது கூதிர் மழையாகவும், 'தென்புலம் படரும்' ஊதைக் காற்றாகவும் செல்லுவதையும் பாடுகின்றன.

இன்னும் கூதிர்பருவத்தையொட்டியே வருகின்ற பனியெதிர் பருவத்தைப்பற்றிய சொற்களும் தொடர்களும் முல்லைத் திணைப் பாடல்களில் பயின்றுள்ளமையும் இவண் சுட்டப்பெறுகின்றன. ''அல்கனும் அழிக்கும் நல்கா வாடை'' ''பனியின் வாடையொரு'' (நற்;364) ''பனிபடு நாளே (367) சுட்டுவதால் உய்த்துணரலாம்.

எடுத்துக்கொண்ட பாடல்களில் வரும் ''வலனேர்பு'' மற்றும் ''குடக்கேர்பு'' எனுஞ்சொற்கள் காற்றும் மழையும் வருவகையை அஃதாவது வலமிருந்து இடம், கிழக்கிலிருந்து மேற்கு எனும் கடிகாரச்சுற்று (CYCLIC) வகையைத் தெளிவு படக்காட்டுவதால் ஐயந்திரிபின்றி வடகிழக்குப்பருவ மழை வருகையோடு ஒத்தமைதல் காணலாம். இப்பருவமழையை தொடர்ந்தே வரூஉம் ''முன்பனி'' யை ''பனிமயங்குஅசை வளி'' என்றும் ''கொண்டல் வான்மழை பொழிந்த வைகறை தன்பனி அற்சிரம்'' என்றும் ''கதிரொடு வேறுபுல வாடை அலைப்ப'' என்றும் உணரமுடிகிறது. நெடுநல் வாடை காட்டும் ''வடந்தைத் தண்வளி''யால் ''தெற்கேர்பு'' இரைஞ்சிய சுடரையும் இவண் மீண்டும் நினைவு கூர்வது மிகப் பொருத்தமாயிருக்கும். ''கார்'' மழை தன்னை முல்லை, குறிஞ்சி, மருதம், பாலைத் திணைப்பாடல்களில் கண்டு தெளிந்ததோடு, ''கூதிரும் முன்பனி''யும் குறிஞ்சியில் மட்டுமன்றி முல்லைத்திணை யுள்ளும் கூறப்பெற்றதும் காட்டப்பெற்றது. இப்போது அவை, நெய்தல் மற்றும் பாலைத்திணைப் பாடல்களுள்ளும் பயிலப்பெற்றுள்ள செய்திகளையும் அறிந்து கொள்ளல் புதியபார்வைக்கு உரங் கொடுப்பதாகும்.

நெய்தலுக்கு ''அறுபருவமும்'' உரித்தென்பதால், அறு பருவச் செய்திகள் காணப்பெறுவது விதிவிலக்கன்று எனினும், அத்திணைப் பாடல்களில் ''கூதிர்'' மழையாகிய கொண்டலும் தண்பணி அறுசிரமும் கூறப்பட்டுள்ள சில பாடல்கள் இவண் குறிக்கப்பெறுகின்றன.

இதுகாறும் கூறிய வற்றால் வடகிழக்குப் பருவக்காற்று என்பது தென்மேற்குப் பருவக்காற்றாய் வடக்கில் சென்ற காற்று பின் தெற்காய் வங்கக்கடலுள் நுழைந்து தமிழகத்துள் கிழக்குக் காற்றாய் ''கொண்டலாய்'' வருதலோடு மழையையும் தருகின்ற அறிவியற் செய்தியை அறியமுடிகிறது.

நெய்தற் கார்க்கியர் எனும் புலவரோ கீழ்க்காற்றுகடல் வழி வருவதால் நீர்த்திவலையொடு வருவதை ''மாக்கழி மணிப்பூக் கூம்பத்தூத் திரைப் பொங்கு பிதிர்த்து வலையொடு மங்குல் தை இக் கையறவந்த தை வரல் ஊதையொடு'' எனப்படுவார் (குறு.55)· இவ்வாறு பழம் பாடல்களில் அறிவியற் கருத்துக்கள் பல நீறுபூத்த நெருப்பாக அமைந்து கிடப்பதனை அறிந்து மகிழலாம்·

# நெடுநல்வாடையில் பிறழ உணரப்பட்ட 'நல்'

— பேரறிஞர். எஸ். சௌந்தரபாண்டியன்,

தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டிய நெடுஞ் செழியன் மீது மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் பாடிய பனுவல் நெடுநல்வாடை. இதில் 'நல்' என்ற சொல்லுக்கு, 'நல்ல' (good) எனும் பொருளை நச்சியார்க்கினியர் கண்டார்.

''அரசன் போகம் வேண்டிப் பொதுச் சொற்பொறானாய் அப்போகத்தின் மனமற்று வேற்றுப் புலந்துப் போந்திருக்கின்ற இருப்பாகலின், அவற்கு நல்லதாகிய வாடையாயிற்று'' (நச் உரை (1948), ப. 329)

பெருமழைப்புலவர் பொ. வே. சோமசுந்தரனாரும் இதே பொருளையே கொண்டார்.

''குளிரால் உலகு வருந்தும்
காட்சியை ஒநி இன்புறுவதால் படிப்போர்க்கு
நல்லவாடை ஆயிற்று' '(பொ. வே. சோ. உரை(1967), ப.11)

பிறஅறிஞர்களும் இவ்வாறே பொருள் கொண்டுளர். மேற்கண்ட நல்ல எனும் பொருள் பொருந்துவதாக இல்லை.

'நல்வாடை' என்பதை 'நல்ல வாடை' என விரிக்கலாம். 'நல்முத்து' என்பதை 'நல்லமுத்து' என்றே கொள்கிறோம்.

ஆனால், 'நல்ல' என்பன் பொருளில்தான் சிக்கல்.

'நல்ல' எனும் தமிழ்ச்சொல்லுக்குப் பல பொருண்மைகள் உள.

'நல்ல' என்பதற்குக் 'கருமை' என்றுகூட ஒரு பொருள் உளது. நல்லபாம்பு—கரும்பாம்பு; பிற பாம்புகளை நோக்கக் கருமை நிறம் கொண்டதால், அப்பாம்பு நல்லபாம்பு எனப்பட்டது. எண்ணெய் கறுப்பாக இருப்பதால், அதற்கு நல்லெண்ணெய் என்ற பெயர் வந்தது.

'நல்ல' என்பதற்குக் 'கடுமையான' என்றொரு பொருளும் உண்டு.

நல்ல வெயில் அடித்தது—கடுமையான வெயில் அடித்தது.

நெடுநல்வாடையில் வரும் 'நல்' என்பதற்குக் 'கடுமையான, என்ற இப்பொருளே பொருந்துவதாக உளது-

ஏனெனில், நெடுநல்வாடை இலக்கியத்தை ஆய்ந்தால். நக்கீரர் குறிக்கும் வாடை மிகமிகக் கடுமையான வாடையாக உள்ளது.

''வையகம்பனிப்ப'' என்கிறார்: உலகமே குளிரும்படியாக இருந்ததாம்! ''குன்று குளிப்பன்ன'' அவ்வாடை இருந்ததாம்!

எனவே, இக்கடுமையைக் குறிக்கவே, 'நல்' எனும் அடைய நக்கீரனார் கையாண்டார் எனக்கோடலாம்.

ஆகலின், நெல் நல் வாடையில், வரும் 'நல்' எனும் சொல்லுக்குக் 'கடுமை' என்ற பொருளையே கொள்ளலாம்.

# வள்ளல் பாண்டித்துரைச்சாமித்தேவர் வாழ்த்துப்பா

—கவிஞர். சங்கரலிங்கம்

## அருள் புரிவாய்!

உலகில் தோன்றிய முதல்மகளே!
உயர்ந்தோர் மூவரின் திருமகளே!
அலகில் நலம்விளை பெருமகளே!
அறமே தமிழே! நறும்புகழே!
தமிழே வாழ்வென வாழ்ந்தோனை!
தாயே சிறந்திட உழைத்தோனை!
தமிழர் தலைவனாம் மலைத்தேனை!
கனிவாய்ப் பாடுவேன் ஒளிதருவாய்!

தெய்வப் பணியிலோர் ஊதுபத்தி!
தேசத் தொண்டிலோர் கற்பூரம்!
உய்யப் பிறந்ததோர் பாண்டி (த்) துரை
வள்ளலைப் போற்றிட அருள்புரிவாய்

## பெருமை கொள்வோம்!

தமிழ்த்தாயே! தவமிருந்தே ஈன்ற மைந்தன்!
தமிழ்வாழத் தான்வாழ்ந்த வளம மனையைத்
தமிழ்வளர்க்கும் கோயிலாக்கி இன்பங் கொண்டோன்!
தமிழ்சிறக்க பொன்பொருளை அள்ளித் தந்தோன்!
தமிழ்வாழ்வே தன்வாழ்வாய் ஏற்று வாழ்ந்தோன்!
தன்மூச்சு பேச்செல்லாம் தமிழுக் காக்கி
தமிழ்த்தாயின் நலம்பேண சங்கம் கண்டே
தமிழாக வாழ்ந்திட்ட சங்கச் சான்றோன்!

சிவஞான முனிவரின் மறுபி றப்பு!
சிந்தையெலாம் இந்தியரே! வெள்ளை யாட்சி
அவலாக்கி பாரதத்தாய் பசியி னுக்கே
உணவாக்கி மிகமகிழ்ந்தோன்! கப்பல் ஓட்ட
நவநிதியை முன்தந்தான்! அரசி ழந்தான்!
விடுதலையாம் வேள்விக்கு விறகா நின்றான்!
தவமகன்! தமிழ்மகன்! விடுத லையின்
வேந்தனவன்! திறம்பாடி பெருமை கொள்வோம்!

# குமரகுருபரரும் சைவசித்தாந்தமும்

பேரறிஞர் ந. கந்தசாமி

முன்னுரை :

தமிழ் இலக்கிய வரலாற்றில் குமரகுருபரர்க்குச் சிறப்பான இடம் உண்டு. கி.பி.17 ஆம் நூற்றாண்டில் ஸ்ரீவைகுண்டத்திற்கு அருகில் சைவ வேளாளர் குலத்தில் தோன்றியவர் குமரகுருபரர்; இளமையில் முருகன் அருளைப்பெற்றவர். இருமொழிப் பெரும் புலமை படைத்த இப்பெரியார் சிற்றிலக்கியங்கள் பலவற்றைச் சிறப்பாகப் பாடியவர். இவர் கற்பனைக் களஞ்சியம்; சந்தக் கவிஞர்; கலைஞானம் மிக்கவர்; நீதி நூலாசிரியர்; யாப்பியலறிஞர். தில்லை நடராசரைப் பொருளாகக்கொண்டு பாக்கள், பாவினங் களுக்கு உதாரணச் செய்யுள்கள்புனைந்துயாப்பிலக்கண வரலாற்றில் புதுமை கண்டவர். இவர் சிறந்த சைவ சித்தாந்தி; அனைத் திற்கும் மேலாகத் தவஞானச் செல்வராய் விளங்கியவர். வடநாட் டிற்கு சென்று காசிமா நகரில் திருவருளாலும், தவவலியாலும் இசுலாமிய மன்னனை ஈர்த்துப் பிணித்துப் பெருநிலம் பெற்று மடம் அமைத்துச் சைவமும் தமிழும் தழைத்தோங்கப் பாடுபட்ட தனிப் பெரும் சான்றோர். இமயவரம்பன், இராசராசன் முதலியோர் படைவலிமையால் பெற்ற வடநாட்டு வெற்றியைவிட, ஆன்மீக வலிமையால் குமரகுருபரர் பெற்ற வெற்றி போற்றுதற்குரியது. ஆதி சங்கரர்க்குப் பின்னர் வடநாட்டில் கொடி நாட்டிய சிறப்புக் குரியவர் குமரகுருபரர்.

குமரகுருபரரின் பிரபந்தங்களில் சைவசித்தாந்தச் சிந்தனை கள் மிகுதியாகக் காணப்பெறும் பனுவல் கந்தர் கலிவெண்பா ஆகும். இந்நூல் சைவர்களின் நித்திய பாராயண நூலாக விளங்குவது. மந்திர ஆற்றல் மிக்கது. இந் நூலின் முற்பகுதி முழுவதும் சைவ சித்தாந்தத்தின் சாரமாகவும், பிற்பகுதி கந்த புராணச் சுருக்கமாகவும் அமைந்திருத்தல் அறியத்தக்கது. தருமை ஆதீனத்தில் நான்காம் பட்டத்தில் வீற்றிருந்த மாசிலாமணி தேசிகர் இவர்க்கு வாய்த்த குரு ஆவார். இவர் பெயரில் முனிவர்

இயற்றிய பண்டார மும்மணிமக்கோவை என்ற நூலும் சித்தாந்தக் கருத்துக்கள் பலவற்றை விளக்குவது. ஏனைய பிரபந்தங்களிலும் இத்தகைய கருத்துக்கள் ஆங்காங்கே தூவப்பெற்றுள்ளன. இக் கட்டுரையில் சைவ நெறிக்குரிய அடிப்படையான மெய்பொருட் சிந்தனைகள் குமரகுருபரரின் பாக்களில் எவ்வாறு புலப்படுத்தப் பெற்றுள்ளன என்பதை ஒரு சிறிது ஆராய்ந்து காண்போம்.

**சைவசித்தாந்தத்தின் உயர்வு**

சிவபரம்பொருளை முழுமுதற்கடவுளாகப் போற்றும் மெய்ப் பொருள் நெறி சைவசித்தாந்தம் ஆகும். பிறவிச் சைவராகிய முனிவர் மக்களை நெறிப்படுத்தும் பாங்கில் சித்தாந்தச் சிந்தனை களை விளக்கும் தத்துவக் கோட்பாட்டினைத்,

''திவ்வியம் பழுத்த சைவ சித்தாத்தம்'' (9.5.23) என்று போற்றுகிறார். மேலும்,

''குடிலை யென்றுந் தடவய னாப்பன்
அருள்வித் திட்டுக் கருணைநீர் பாய்ச்சி
வேத மென்னும் பாதவம் வளர்த்தனை!
பாதவ மதனிற் படுபயன் பலவே, அவற்றுள்
இலைகொண் டுவந்தனர் பலரே; இலையொரீஇத்
தளிர்கொண்டுவந்தனர் பலரே; தளிரொரீஇ
அரும்பொடு மலர்பிஞ் சருங்கா யென்றிவை
விரும்பினர் கொண்டுகொண் டுவந்தனர் பலரே
அவ்வா றுறுப்பு மிவ்வாறு பயப்ப
ஒரும்வே தாந்தமென் றுச்சியிற் பழுத்த
ஆரா வின்ப வருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
தேனமு தருந்தினர் சிலரே'' (9.11.23 – 35)

என்று பாராட்டுதல் எண்ணி இன்புறத்தக்கது. ஏனைய சமயங்கள் அனைத்திற்கும் முடிமணியாகத் திகழ்வது சைவமாகும். ஆன்மீகப் பயணத்தில் (Spiritual Journey) மற்ற தத்துவங்கள் யாவும் பேருந்து நிறுத்தங்கள் (Bus Stops) போல்வன. ஆயின். சைவ சித்தாந்தம் பேருந்து போய் நிற்கும் இறுதி இடம் (Terminus) போன்றது. ஏனைய தத்துவங்களையும் ஒதுக்காது படிநிலையாகக் கொண்டு சித்தாந்தம் ஓங்கி நிற்கிறது. காட்சிப்பொருள், கருத்துப் பொருள் உணர்வுப்பொருள் ஆகிய அனைத்தையும் இறை, (பதி), உயிர் (பசு), தளை (பாசம்) என்று மூவகைப் பொருட் பாகு பாட்டிற்குள் அடக்கிச் சைவ சித்தாந்தம் விளக்குதல் அறியத்தக்கது.

இம்முப்பொருளையும் உள்ளவாறு அறியும் பேறு பெற்றோர் பிறவி நீங்கிப்பேரின்பம் பெறுவர்.

முப்பொருள் இயல்பு

அடிகளார் தெளிவுறுத்தும் அடிப்படையான சித்தாந்தக் கருத்துக்களை இங்குத் தொகுத்து நோக்குவோம்.

இறை

இறை, உயிர், தளை என்பன மூன்றுமே ஒருவரால் படைக்கப்படாதவை. அனாதிகாலம் தொட்டு இருப்பன. எனின், இக்காரணம்பற்றி இம்மூன்றும் இணையானவை என்று எண்ணி விடுதல் கூடாது. மூன்றுமே சத்துப்பொருள்கள். இறை, உயிராகிய இரண்டும் சத்துப்பொருள் ஆவதோடு சித்துப் பொருளாகவும் இருப்பவை. ஆயின் இறை ஒன்றே ஆனந்தப் பொருளாகவும் அமைவது. இப்பொருள்களின் இருப்பினை நிலைநாட்டுதல் மெய் கண்ட சாத்திரத்தின் பணி ஆகும். பக்தி இலக்கியம் பாடவந்த குமரகுருபரர் இப்பொருள்களின் இயல்புகளை மட்டுமே விளக்கும் வகையில் பாத்தொடுத்துள்ளார்.

இறைவன் தோற்றம் இருப்பு, மறைவு ஆகிய மூன்றும் இல்லாதவன் (ஆதி, நடு, அந்தம் கடந்தவன்). நித்தியானந்த போதன் (சச்சிதானந்தன்) .இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்கியவன். ஒளிமயமானவன். பெயர் (குறி), உருவம் (கோலம்). குணம் (முக்குணம்) அற்றவன். எங்கும் செறிந்தவன். நீக்கமற நின்றவன். மனம் முதலிய கரணங்களுக்கு எட்டாத முற்றறிவினன். இங்ஙனம் இறைவனின் சிறப்பியல்புகளை (சொரூப இலக்கணம்) அடிகளார் கந்தர் கலி வெண்பாவில் குறித்துள்ளார், இந்நிலையில் இறைவன் பரமசிவம் எனப் பரவப்பெறுவான்,

இருப்பு நிலையிலுள்ள சிவன் உயிர்களிடத்தில் கொண்ட கருணை காரணமாக அவற்றை உய்விக்க வேண்டி அருள் உருவம் கொள்கிறான். இந்நிலையில் சக்தி என்று பெயர் பெறுகிறான், இருப்பு நிலை சிவம்; இயக்கநிலை சக்தி. இச்சை, ஞானம், கிரியை என்பன இறைவனின் சக்திகள். இவையே அவனுக்குரிய திரிகரணமாகக் கூறப்பெறும் உருவம், அருவுருவம், அருவம் ஆகிய

மூவகைத் திருமேனிகளைத் தாங்குகிறான். அருளே அவன் உருவம் என்பதை ''கருணை திருவுருவாய்'' என்ற பகுதியில் அடிகள் சுட்டுகிறார்.

எல்லாப் பொருளையும் கடந்து நிற்கும் இறைவன் யாவற்றிலும் கலந்தும் விளங்குகிறான். இதனை

"........... எவ்வுயிர்க்கும்
பின்னமற நின்ற பெருமாளே''

என்று போற்றுகிறார். இறைவன் ஆற்றும் ஐவகைத் தொழில்களையும் குறித்துள்ளார்.

## ஐவகைத் தொழில்கள்

### 1. படைப்பு

ஆணவ இருளில் அகப்பட்டுத் தத்தளிக்கும் ஆன்மாவிற்குக் கருவி கரணங்களையும் நுகர் பொருள்களையும் வழங்கும் பெருங் கருணைத்திறத்தால், மாயை என்னும் முதற் கரணத்திலிருந்து சக்தியைத் துணைக்காரணமாகக்கொண்டு இறைவன் நிமித்த காரணமாக நின்று உலகைப் படைக்கிறான். உயிர்கள் வினைக்கு ஈடாகப் பல்வேறு பிறவிகளை எடுத்து முடிவில் ஆணவ மலம் வறுத்த கடலையைப் போல் விளைவற்ற நிலையில் இறைவன் குருவாக வந்து ஆன்மாவிற்கு அருள்கிறான்.

### 2. காத்தல்

ஆன்மாக்கள் ஈட்டிய வினைகளுக்குரிய பயன்களை நுகர்ந்து தீர்க்கும்வரை உரிய பொருள்களைக் கொடுத்துக் காக்கிறான். இறைவனின் காவல் ஆன்மாக்கள் வினைப்பயனிலிருந்து தப்ப முடியாதபடி பார்த்துக்கொள்கிறது.

### 3. அழிப்பு

பல்வேறு பிறவிகளை எடுக்கும் உயிர்கள் வினை நுகர்ச்சியை முற்றுமாகத் துய்த்தற்கு இயலாத நிலையில் தளர்ந்த உடல்களை விடுத்து, வினைக்கீடாக மறுபிறவி எடுப்பதற்கு இறைவன் அழித்தல் தொழிலைச் செய்கிறான். இறப்பு என்பது தூக்கத்தைப் போன்றது. தூங்கி எழுந்தவன் ஊக்கத்துடன் தொழில் புரிதல்

போல் இறந்து பிறந்தவன் வினை நுகர்ச்சியைத் தொடர்கிறான். ஆன்மாவிற்கும் மாயைக்குமுள்ள தொடர்பினை இறைவன் மட்டுமே அழிக்கிறான்.

4. மறைப்பு

ஆணவப் பிணிப்பு காரணமாக ஆன்மா தன்னையும் தலைவனையும் உலகையும் அறிவது இல்லை. திரோதான சக்தி ஆணவத்தை அழியச் செய்யும் பொருட்டு ஆன்மாவை உலக நாட்டத்தில் உய்த்துவிடும், பட்டு கெட்டுப் பார்த்தது போதும் என்ற மனநிலை ஏற்பட்டு இருவினை ஒப்பு வரும்வரை இறைவனைக் காட்டாது மறைத்த அச்சக்தியே. பக்குவப்பட்டபின் அருட்சக்தியாக மாறி நின்று ஆன்ம ஈடேற்றத்திற்கு உதவும்.

5. அருளல்

மலபரிபாகம் அமைந்த ஆன்மாவின் உய்திக்காக இறைவன் குரு வடிவாக வந்து மெய்ப்பொருளை உணர்த்தித்தீக்கை செய்து தன்னுடன் ஒன்றுதற்கு அருள் புரிகிறான்.

மேற்சுட்டிய ஐவகைத் தொழில்களில் முதல் மூன்றும் உடம்புடன் தொடர்புடையவை. இறைவன் உயிர்க்குரிய உடம்பைத் தான் படைத்து, காத்து அழிக்கிறான். இறுதியில் உள்ளன இரண்டும் உயிருடன் தொடர்புடையவை. மலபரிபாகத்தின் பொருட்டு மறைத்தலும், பேரின்பம் வழங்குதற் பொருட்டு அருளலும் நிகழ்கின்றன.

குமரகுருபரர்,

''............... ஐந்தொழிற்கும்
நீங்காத பேருருவாய் நின்றோனே''
''ஆவிப் புலனுக் கறிவளிப்ப வைந்தொழிலும்
ஏவித் தனிநடத்தும் எங்கோவே''

என்று குறிப்பிடுதல் காணத்தக்கது. இறைவனின் அத்துவாமூர்த்தம் (1.6.–64]. அட்டமூர்த்தம் (1.65) என்பனவும் கந்தர் கலிவெண்பாவில் சுட்டப்பெற்றன.

*உயிர்*

உயிர்கள் எண்ணற்றவை. 84 இலட்சம் யோனிபேதம் கொண்டவை. நால்வகைத் தோற்றமும் எழுவகைப் பிறப்பும் உடையவை.

ஆணவமாகிய ஒரு மலம் உடையவை விஞ்ஞானகலர் என்றும், ஆணவமும் கன்மமும் உடையவை பிரளயாகலர் என்றும், இவற்றுடன் மாயா மலமும் உடையவை சகலர் என்றும் சுட்டப்பெறுவர் (1.30–33) கேவலம், சகலம் சுத்தம், என்ற மூவகை அவத்தை குறித்தும் முனிவர் மொழிந்துள்ளார். தனுகரண புவன போகங்களைப் பெறுவதற்கு முற்பட்ட இருள்நிலை கேவலம் எனப்படும். உடம்போடு கூடிய நிலை சகலம் எனப்படும். வினை நீங்கிய நிலையில் பேரின்பத்தைத் துய்த்தற்குரிய நிலை சுத்தம் எனப்படும். மும்மலத்தார்க்குக் குரு வடிவில் தோன்றியும், இரு மலர்த்தார்க்கு இடபாருடராகக் காட்சி தந்தும், ஒரு மலர்த்தார்க்கு உள் நின்று உணர்த்தியும் இறைவன் பேரின்பம் வழங்குவான் (1.29–43).

சிவனும் சீவனும் சத்து, சித்துப்பொருள்கள். இவ்விரண்டிற்கும் உள்ள பல ஒற்றுமைகளை அடிகளார் அழகாகச்சுட்டுகிறார். ஆயினும் முழுமையும் சிவனுக்கும், சிற்றறிவும் சிறு தொழிலும் சீவனுக்கும் உரியன (9–8.1–25).

முத்தி நிலையிலும் சிவன் ஒருவனே பரம்பொருள். ஆன்மா அப்பொருளை அனுபவிக்கும் அடிமை குருவருளினால் திருவருள் வாய்க்க வேண்டும் என்ற உண்மையைப் பண்டார மும்மணிக் கோவையில் உணர்த்தியுள்ளார். சீவகரணம் சிவகரணமாகிறது. (9.24–33), சீவன் சிவனாகிறது (9.24) உயர்பொருளை உறுதற்கு உயிரும் உயர்நிலை பெறுதல் வேண்டும் என்பது உணர்தற்குரியது.

*தளை*

தளை, கட்டு, பாசம் என்பன ஒரு பொருளன இத்தனை 1. ஆணவம், 2. கண்மம், 3. மாயை என்று மூன்று வகைப்படும் ஆணவம் இருள்மயமானது. ''ஆணவமான படலம்'', ''விடுந்த கலாப் பாச இருள்'' என்று சுட்டுகிறார் குமரகுருபரர் நல்வினை, தீவினை எனக்கன்மம் இருவகைப்படும். இவ்வினைக்கீடாகத்தான் உயிர்க்கு நுகர்ச்சி அமைகிறது. (1.16–21) மாயை மூவகைப்படும். மூவகை ஆன்மாக்களுக்குரிய நுகர்ச்சிப்பொருள்களை வழங்குதற்பொருட்டுச் சைவ சித்தாந்தம் மாயையை மூன்றாகப் பகுத்தது.

இவற்றை ''விந்து, மோகினி, மான்'' (1.13) என்று குமரகுருபரர் குறித்துள்ளார். இவை முறையே சுத்த மாயை, அசுத்தமாயை பிரகிருதி மாயை ஆகியவற்றைக்குறிக்கும்.

இம்மூன்றுடன் மாயேயம், திரோதாயி என்பனவற்றையும் சேர்த்து ஐவகை மலங்களையும் ஓரிடத்தில் குறித்துள்ளார் (1.70).

### சாதனமும் வீடு பேறும்

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நால்வகை நெறிகளையும், அவற்றுக்குரிய முத்தி நிலைகளையும் கந்தர் கலிவெண்பாவில் அடிகள் அழகாக விளக்கியுள்ளார் (1.19–29). சிவ சாதனங்களாகிய உருத்திரலக்கம் (1.55,565). திருநீறு (1.38,14.136). திருவைந்தெழுத்து (1.68–9, 630) ஆகிய மூன்றையும் முனிவர் குறித்துள்ளார். சீவன் முத்தராயினும், ஆலயந்தொழுதலும் அடியாரைத் தொழுதலும் வேண்டும் என்பதைப்பல இடங்களில் சுட்டுகிறார்.

இங்ஙனம் சித்தாந்த நெறியில் ஒருகிவருவோர் பெறும் பேற்றினை

''இறவா நிலைமைபெற் றின்பமார்ந் திருக்கும்
பிறவா நன்னெறி'' (9.5.24–25).

என்று குமரகுருபரர் தெளிவுறுத்துகின்றார். இதுவே சைவர்களின் இறுதிக்குறிக்கோளாகும்.

### முடிவுரை

சிறந்த இலக்கியப் படைப்பாளராகவும், கவிஞராகவும், யாப்பியல் மேதையாகவும், அருளாளராகவும்விளங்கிய குமரகுருபரர் சைவ சித்தாந்தச் செந்நெறியினை மக்கள் அறிந்து, உணர்ந்து, கடைப்பிடித்து ஈடேறவேண்டும் என்ற எண்ணத்தில் தம் பிரபந்தங்களில் தேவையான அளவு சித்தாந்தச் சிந்தனைகளை வழங்கியுள்ளார் என்பது தெளிவு. இறைவனையும் சக்தியையும் விநாயகர், முருகன் ஆகிய கடவுளரையும் அவர் பாடியிருப்பினும், ஒரு பரம்பொருளின் பல்வேறு வடிவங்களாகவே எண்ணிப்போற்றியுள்ளார் என்பது நுணுகி நோக்குவோர்க்குப் புலனாகும்.

# இராமனின் முதற் பயணம்

—பேரறிஞர் வ. குருநாதன்

இராமன் அயோத்தியிலிருந்து மேற்கொண்ட பயணங்கள் இரண்டு. அவற்றுள் முதற் பயணம் இளமைப்பயணம்; பிரிந்தறியாத் தம்பி பின்தொடரப் பெருமுனிவன் கோசிகனொடு புறப்பட்ட அப்பயணத்தில் அவன் மிதிலை வரை போகின்றான். உலகுக்கொருவனாய் அவனை உயர்த்திக் காட்டுகின்ற அந்தப் பயணத்தில் அவன் பெற்ற பட்டறிவும் பயன்பாடுகளுமே, பின்னர் நாடு நீங்கிக்காடு சென்ற அவனது இரண்டாம் பயணத்தை ஈடேற்றுகின்றன. இந்த உண்மையை ஆய்வுநோக்கில் காண்பதே இக்கட்டுரை.

## கோசிகன் கையடை

இமயத்தை இருப்பிடமாகக் கொண்ட கோசிகன் சித்தாச்சிரமத்தில் வேள்வி செய்து சிறப்படைய விரும்புகின்றான். பொதுவாக வேள்வி செய்வோனுக்கும் இருவகைப் பகைகள் தோன்றி இடையூறுண்டாக்குதல் வழக்கம். அவற்றுள், முதல் வகையான காமவெகுளி போன்ற உட்பகைகளைத் தானே கடிந்து விடலாம்; அதற்குப் பிறருதவி தேவையில்லை. ஆனால், சுபாகு, மாரீசர் போன்ற வெளிப்பகையைப் பிறருதவியின்றிக் கடிவது எங்ஙனம்? தவ ஆற்றலாலும் சாப வன்மையாலும் தானே அப்பகையை அழித்து விடலாம். ஆனால் அதிலொரு சிக்கல்; அரக்கர்களாகிய வெளிப்பகையை அழிப்பதாக எண்ணிக்கொண்டு மீண்டும் அந்தக் காமவெகுளியாகிய உட்பகைக்கு வாழ்வளித்து விடக்கூடாதன்றோ? எனவே, பிறருதவி பெற்றே அப்பகையைக் கடிய வேண்டும் என்ற நிலை ஏற்படுகின்றது. ஏற்பட்டவுடன், முனிவன் சிந்தனை இராமனிடத்தே பாய்கிறது. அவன் தந்தையாகிய தயரதனிடம் சென்று, அவனைத் தன்னுடன் அனுப்புமாறு வேண்டுகின்றான் கோசிகன்.

தயரதனோ மகனையனுப்ப மனமின்றித் தானே உடன் வந்து பகைவென்று வேள்வி காப்பதாகக் கூறுகின்றான். இராமன் படையூற்றமிலன், சிறியன் என அதற்கும் அவன் காரணம் காட்டு கின்றான். முனிவன் ஒப்ப வேண்டியவன்தானே? ஒப்பவில்லை; மாறாக உருத்தெழுகின்றான். ஏன்? அவன் நோக்கம் தன் வேள்வி காத்தல் மட்டுமாய் இருந்திருப்பின் ஒரு கால் ஒப்பிருப் பான். ஆனால் அந்தத் தன்னல நோக்கமொன்றே கொண்டு அப்பெருமுனி இயங்கவில்லை.

பிறரிடத்திலிருந்து ஒருதவியைத் தான் பெற வேண்டுமாயின் அவ்வுதவியைப் பெறுமுன்பே தான் அவருக்குப் பலவுதவிகளைச் செய்து அவரையே தனக்கு நன்றிக்கடன் பட்டவராகச் செய்துவிடும் கொள்கை கோசிகனுடையதாயிருப்பதால், அக்கொள்கையை உட்கொண்டு அதற்கேற்பவே அவன் இராமனைத் தருமாறு வேண்டுகின்றான். இராமன் அவதார மனிதன் என்பதையும், அவனால் நிகழவிருக்கும் அரக்காழிவையும் அல்லவருயர்வையும் தான் உணர்ந்தவனாகையால் அவை கருதித் தன்னாலியன்ற வரையில் இராமனை உருவாக்க நினைக்கின்றான். இராமாவதர ரத்தில் தன் முத்திரையை அழுந்தப் பதித்துவைப்பதே அவனது முழுநோக்கமாய் இருக்கிறது. இந்த உண்மையை அறியாமையால் இராமனைத் தவிர்த்துத் தான் வருவதாய் இடைமறிக்கின்றான் தயரதன். அதனாலேயே கோசிகன் வெகுண்டெழ நேருகின்றது.

இந்நிலையில் கோசிகன் எண்ணமெல்லாம் குறையறத் தெளிந்த வசிட்டன், அவன் வெகுளியைத் தவித்து மன்னனுக்கு உண்மையை உணர்த்துகின்றான்: 'கோசிகன் இராமனால் பயன் பெறுவதைவிடவும் இராமனுக்குப் பயன்தரவே வந்திருக்கின்றான். அவனால் இராமன் அடையக் கூடிய அளவிலடங்கா அரும்பெரும் உறுதிகளையெல்லாம் இராமனைப்பெற்ற நீயே மறுத்தல் புலமையன்று; அம்மட்டோ?

''பெய்யு மாரியாற் பெருகு வெள்ளம்போய்
மொய்கொள் வேலைவாய் முடுகு மாறுபோல்
ஐய நின்மகற் களவில் விஞ்சைவந்து
எய்து காலமின் றெதிர்ந்தது......'

(பால.கையடை.15)

இங்ஙனம் வசிட்டனது வாய்மொழி கேட்டுணர்ந்த தயரதன், தன் மகன் ஆக்கத்தில் தன்னைவிடவும் பெருநாட்டம் கொண்டுவந்துள்ள கோசிகனையே அவனுக்குத் தந்தையும் தாயுமாய்க் கொண்டு.

வந்த நம்பியைத் தம்பி தன்னொடு
முந்தை நான்மறை முனிக்கும் காட்டிநல்
தந்தை நீதனித் தாயும் நீயிவர்க்கு
எந்தை தந்தனன் இயைந்த செய்கென்றான்

(பால.கையடை.17)

இதனுள், 'தந்தை நீ; தனித் தாயும் நீ' என்று கோசிகனுக்கு இராமனின் பெற்றோர் நிலை தந்து தயரதன் மொழிந்தமைகூட அவனது ஆழ்மனத்தில் வேரூன்றி நின்ற அன்பின் தாக்கமேயாம். ஒரு மகன் வளர்ச்சி அவனுடைய தாய் தந்தையர் பொறுப்பிலேயே அமைய முடியும். இராமனோ அப்போது அந்த இருவரையும் பிரிந்து போகின்றான். இந்தப் பிரிவினால் தாயன்பையும் தந்தையின் பொறுப்பையும் அவன் இழந்துவிடக்கூடாதே எனத் துடிக்கின்றான் தயரதன். அவனுடைய இந்தத் துடிப்பே தாய் போல் அன்பு செலுத்தியும் தந்தைபோல் ஆக்கம் கொளுத்தியும் இராமனை உருவாக்குமாறு கோசிகனிடம் வேண்டிக்கொள்ளத் தூண்டுகிறது. மகன்மேல் தான் கொண்டுள்ள அதே பற்றினைக் கோசிகனும் கொள்ள வேண்டுமென்ற விருப்பத்தையே அவன் இப்படி வெளியிடுகின்றான்.

*மந்திர வடிவு*

முதலில் கோசிகன் வெகுண்டெழுந்தாலும். தயரதனுடைய இந்தத் தந்தையன்பைக் கண்டபோது அவன் வெகுளியெல் லாம் பறந்துவிடுகின்றது. மேலும். உள்ளார்ந்தோர் உருக்கத்தை யும் பெற்றான் என்று சொல்லலாம். என்ன இராம இலக்குவர் களை அழைத்துக்கொண்டு அவன் சென்ற வழிப்பயணத்தில் சரயு ஆற்றையும் தானுவாச்சிரமத்தையும் கடந்துபோய், தாடகையின் இடமான பாலைவனத்தில் நடக்க நேர்ந்த போது அந்த உருக்கம் வெளிப்படுகின்றது. இளஞ்சிறுவர்களாகிய இவர்களின திருவடிகள் இந்தக் கொடிய பாலைவனத்தில் வெம்மையிற்

கருகிவிடுமே எனத் தாய்மையன்போடு துணுக்கமுறுகின்றான். உடனே அவர்களுக்கு வெம்மை தோன்றாதவாறு பலை, அதி பலை என்ற பிரம விஞ்சைகள் இரண்டினை அருளுகின்றான். இம்மந்திரங்களை உருவேற்றி உள்ளத்திற் கொள்ளும்போது, ஊழித்தீப்போல் எரிந்து நின்ற அக்கொடிய பாலைவனம் குளிர்ந்த பூம்பொய்கைபோல் அவர்களுக்கு மாறித் தோன்று கின்றது. இது கோசிக முனிவனால் இராம இலக்குவர் பெற்ற குறிப்பிடத்தக்க முதற்பெருநன்மையாகும்.

இந்த மந்திரங்களின் பயன் இப்பாலைவனத்தின் வெம் மையை மாற்றிக் காட்டுவதோடு மட்டும் அமைந்து விடவில்லை. இராமாவதாரத்தின் சிறப்பு நோக்கமாய்ப் பின் நிழகவிருக்கும் காடுறை வாழ்க்கையிலும் இவற்றின் பயன் தொடரக் காண் கின்றோம். இராமன் சீதையோடும் இலக்குவனோடும் காளிந்தி யாற்றைக் கடந்து ஒரு பாலைவனத்தில் போகும்போது சீதை ஆற்றாளெனஇராமன் நினைக்கவும் அந்த வெம்மை மாறுவதைக் காணலாம்,

‘நீங்க லாற்றலள் சனகியென் றண்ணலும் நினைந்தான்
ஓங்கு வெய்யவன் உடுபதி யெனக்கதிர் உகுத்தான்
தாங்கு வெங்கடத் துலவைகள் தழைகொண்டு தழைத்த
பாங்கு வெங்கனல் பங்கய வனங்களாய்ப் பரந்த.

(அயோத்தியா.வனம்புகு.39)

இங்கே ‘நினைந்தான்’ என்றது. மேற்கண்ட மந்திரங் களையேயாம் இந்நிகழ்ச்சியின் தொடர்பான,

‘கால மின்றியும் கனிந்தன கனிநெடுங் கந்தம்
மூல மின்றியும் முகிழ்த்தன நிலனுற முழுதும்
கோல மங்கையர் ஒத்தன கொம்பர்கள் இம்பர்ச்
சீல மன்றியும் செய்தவம் வேறுமொன்றுளதோ ?’

(அயோத்தியா.வனம்புகு.44)

என்ற பாடலைக் கொண்டு, இந்த வெம்மை மாற்றம் இராமன் சீதை முதலியோரின் சீலத்தால்–ஒழுக்கத்தால்–மட்டுமே நிகழ்ந்த தாகக் கொள்ளலாகாது. ஒழுக்கம் இலாதார்க்கு மந்திரங்கள் பயனபடாவாகையால் அந்த மந்திரங்களுக்கு இவர்களின் ஒழுக்கம் துணைநின்று பயனளித்தன என்பதே கருத்தாய்க் கொள்ளல் வேண்டும்.

*தாடகைவதம் : இராமன் கைவண்ணம்*

இராமன் அறத்திற்குத் துணைநின்று மறத்தை வீழ்த்திய வரலாற்றில் முன்னிற்பது இந்தத் தாடகை வதமே. இந்நிகழ்ச்சியை அறத்தின்பாற்பட்டதாகக் கோசிகன் பல வகைகளில் நிறுவுகின்றான். என்றாலும் இராமனால் இதனை முழுவதும் அறச் செயலாக ஏற்க முடியவில்லை. அதுவே அறத்தில் அவனுக்குள்ள ஆழ்ந்த ஊற்றத்தைக் காட்டுகின்றது, எனவேதான் பலவிடங்களிலும் அவனை அறத்தின் நாயகன் என வழங்குகின்றார் கம்பர். அப்படியானால் அந்த அறத்தின் நாயகன் தனக்கு முழுவுடன் பாடு இல்லாதபோது இந்த வதையைச் செய்யலாமா என்ற கேள்வி எழுகின்றது. செய்யலாம் என்பதே இதற்கு நேரிய விடையாகவும் உள்ளது. அவளைக் கொல்வதற்கு முனிவன் கூறுகின்ற காரணங்களை எவ்வழியிலும் மறுத்தற்கில்லை. அன்றியும்.

> 'கொலையிற் கொடியாரை வேந்தொறுந்தல் பைங்கூழ்
> களைகட் டதனொடு நேர்'. (குறள்.550)

என்ற தமிழ் மறையின்படியும் இதனை அறமென்றே கொள்ள வேண்டும். பெண்ணென்று நினைப்பதெல்லாம் இராமனின் பெருந்தன்மையைக் காட்டுமேயன்றி, அவளைக் கொல்லலாகாது என்பதற்குத் துணைவர முடியாது. இதனையும் திறம்பட எடுத்துக் காட்டுடன் நிறுவுகின்றான் கோசிகன். வேதமுனிவன் சொல்லையே வேதமெனக்கொண்டு இராமன் இந்த வதைக்கு இசைகின்றான்.

> ஐயன் அங்கது கேட்டறன் அல்லவும்
> எய்தி னாலது செய்கவென் றேவினால்
> மெய்ய நின்னுரை வேத மெனக்கொடு
> செய்கை யன்றோ அறஞ்செயு மாறென்றான்
>
> (பால.தாடகை வதை. 67)

இங்குத் தன்னிசைவையும் அறத்தோடேயே கூட்டிக் காட்டுகின்றான் இராமன். அறத்திற்கு இஃதொரு புதிய விளக்கமாகவும் நிற்கின்றது.

அடுத்து, இந்த வதை நிகழ்ச்சியை வரலாற்று முறையில் நோக்கினாலும் இஃது அறத்திற்கு மாறுபட்டதன்று என்பது விளங்கும். கம்பர் இதனை நயமான நாடகப் பாணியில் அமைத்துக் காட்டுகின்றார். தாம் நடந்துசெ்ற பாலை

வனத்தோடு தொடர்புடையதான தாடகை வரலாற்றைக் கோசிகன் இராம இலக்குவர்களுக்குச் சொல்லி முடிக்கையிலேயே அவள் அவர்களுக்கெதிரே தோன்றி உருத்துப் பேராரவாரம் செய்து நெடுமொழிபேசிப் பற்பறித்து வேலெறிவேன் என வெகுளுகின் றாள். அவை கண்டும் இராமன் பதற்றப்படாமல், அவளைப் பெண்ணென நினைத்து அமைதியாய் இருக்கின்றான். அவன் உள்ளத்தையுணர்ந்த கோசிகன் அவளைப் பெண்ணெனக் கருதல் தகாதென்றும், பெண் தன்மை சிறிதுமில்லாத அவளைக் கொன்றால் அது பெண் கொலையாகாதென்றும், இதற்கு முன்னும் தீமை புரிந்த பெண்களைத் திருமாலும் இந்திர னும் கொன்று புகழுற்றனரென்றும், கூற்றினுங் கொடிய அவளைக் கொல்வதே நல்லறமென்றும் பலவாறு கூற, அப் போது அம் முனிவனுக்கு இசைவுதந்த இராமன் அதற்குப்பின்னும் தானே வலியப்போய் அம்பு தொடுக்காமல் நிற்கின்றான். ஆனால் தாடகை தான் முந்திக்கொண்டு அவன் மேல் சூலத்தை ஏவுகின் றாள். அப்பொழுதும் இராமன் அவளைக்கொல்லாது தற்காத்தல் வேண்டி அச்சூலத்தை மட்டும் துணிக்கின்றான். ஆனால் தொடர்ந்து அத்தாடகை அவன்மேல் கல்மாரி 'பொழிகின்ற போது, அதனைத் தன் வில்மாரியால் விலக்கிவிட்டு இராமன் அவள்மேல் அம்புதொடுத்துக் கொல்கின்றான். இவ்வகையில் தாடகை தானே தன் செருக்கினாலும் வெகுளியினாலும் வலிந்து போரிட்டு வீழ்ந்தாளேயன்றி எவ்வகையிலும் இராமனால் அறங் கடந்து கொல்லப்படவில்லை.

இந்தத் தாடகை வதமே பின்னர் நிகழவிருக்கும் இராவண வதத்திற்கு ஒரு வெள்ளோட்டமாகவும் இராமனுக்கு ஒரு முதல் வெற்றியாகவும் அமைகிறது. இவள் வீழ்ச்சி இராவணனது வெற்றிக் கொடியின் வீழ்ச்சியாகவும், இதுவரை அரக்கர்களின் குருதியைக் குடிக்க அஞ்சிக்கொண்டிருந்த கூற்றுவன் இந்தப்போரினால் தன் அச்சம் நீங்கி அவர்களின் குருதியைப் பருகத் தொடங்கியதாகவும் கம்பர் இந்நிகழ்ச்சியை முடித்துக்காட்டுகின்றார்.

*படைக்கல வரவு*

தாடகை வதத்தைத் தொடர்ந்து இராமனுக்குக் கோசி கனிடத்திலிருந்து கிடைத்த அரும்பெரும் நன்மை தெய்வப் படைக் கலங்களாகும். முன்பு விஞ்சைகளை அளித்துத் தாயன்பைக் காட்டிய

கோசிகன் இப்போது படைக் கலங்களை அளித்துத் தந்தையின் கடமையைச் செய்கின்றான், இப்படைக் கலங்களைத் தாடகை வதத்தின்முன் இராமனுக்கு வழங்காமல் இப்போது வழங்குவதற்கும் காரணங்காணலாம். முன்பு அதற்குரிய வாய்ப்பு நேரவில்லை என்பதிருக்கவும் தெய்வப் படைக்கலங்களான இவற்றை ஏற்கும் ஆற்றல் இரமனுக்குண்டா என்பதும் புலனாகாமல் இருந்தது. இப்போது நிகழ்ந்த் தாடகை வதத்தில் இராமன் ஓரம்பினால் அவளுயிரை நீக்கியபோதே அது புலனாயிற்று. அன்றியும் அவனுடைய உண்மைப் பேராற்றல் இன்னது என்பதும் விளங் கிற்று. இனி, அவனுக்குப் படைக்கலங்கள் வழங்குவதில் பொருத் தமுண்டு. எனவேதான், காலமும் இடனும் கருதிச் செயலாற்றும் கோசிக முனிவன் தாடகை வதத்திற்குப் பின் இராமனுக்குப் படை வழங்குகின்றான்.

இனி, இப்படைக்கலங்கள் உவகையோடு இராமனை அடைந்து அவனுக்குக் குற்றேவல் செய்த திறமும் வியப்பினுக் குரியது.

> மேவினம் பிரித லாற்றேம் வீரநீ விதியின் எம்மை
> ஏவின செய்து நிற்றும் இளையவன் போல வென்று
> தேவர்தம் படைகள் செப்பச் செவ்விதென்–றவனும் நேரப்
> பூவைபோல் நிறுத்தி னாற்குப் புறத்தொழில்
> புரிந்த வன்றே
>
> (பால.வேள்வி.3)

இங்ஙனம் தன் படைக்கலங்கள் இராமனுக்கு குற்றேவல் புரியுந் தன்மை அப்படைகளை அவனுக்கு வழங்கிய கோசிகனுக்கே பெரும் வியப்பை ஊட்டுகின்றது. இதனைப் பின்னர்ச் சனகனிடம் இராமனைப் பற்றிக் கூறும் போது அம்முனிவன் தன் பழைய வியப்பு மாறாமல் பகர்கின்றான்.

> ஆய்ந்தேற உணரைய அயற்கேயும் அறிவரிய
> காய்ந்தேவில் உலகனைத்துங் கடலோடும் மலையோடும்
> தீந்தேறச் சுடுகிற்கும் படைக்கலங்கள் செய்தவத்தால்
> ஈந்தேனும் மனமுட்க இவற்கேவல் செய்குநவால்.
>
> (பால.குலமுறை.28)

இது வெறும் புகழ்ச்சியன்று; பின்னே சீதையைக் கவர்வதற்குத் துணைவேண்டிய இராவணனை இடித்துரை செய்து எச்சரித்த மாரீசன் கூற்றாக உள்ள பகுதியை நோக்கினால் இதன் உண்மை விளங்கும்.

ஈசன்முதல் மற்றுமிமை யோருலகும் மற்றைத்
தேசமுதல் முற்றுமொர் இமைப்பினுயிர் தின்ப
கோசிகன் அளித்தகட வுட்படை கொதிப்போடு
ஆசில கணிப்பில இராமனருள் நிற்ப.
(ஆரணிய. மாரீசன்வதை.195)

வேள்வி காத்து நின்ற இராமனிடம் போருக்குச் சென்று அவனால் அடிபட்டுத் தப்பியவனாதலால் நேரில் கண்டுணர்ந்தவனான இந்த மாரீசனின் கூற்றும் புனைந்துரையன்றாம். இவ்வாறு பகையரக்களான மாரீசனும் புகழும்படியான இந்தப் படைக்கலங்கள் இராமனுக்கு ஏவல்புரிகின்றன. இவற்றையெல்லாம் அவனுக்கு வழங்கி இந்த அவதாரத்தில் தன் முத்திரையைப் பதிக்கின்றான் கோசிகன்.

## வேள்விகாத்தல்

இராம இலக்குவர்களோடு சித்தாச்சிரமம் சேர்ந்த கோசிகன் அவர்களைக் காவலாக வைத்துவிட்டுத்தன் வேள்வியைத் தொடங்குகின்றான். அரசிளங்குமரர்கள் அவ்வேள்வியைக் காத்த திறத்தைக் கம்பர் நயம்படப் பாடுகின்றார்.

எண்ணுதற் காக்கரிது இரண்டு மூன்றுநாள்
விண்ணவர்க் காக்கிய முனிவன் வேள்வியை
மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்கள்
கண்ணினைக் காக்கின்ற இமையிற் காத்தனர்.
(பால,வேள்வி.41)

இதில் அமைந்துள்ள 'கண்ணினைக் காக்கின்ற இமையிற் காத்தனர்' என்ற உவமை அன்றாட உலகியலில் வழங்கும் எளிய உவமையே எனினும், இங்கே அது மிகுந்த பொருளழகும் பொருத்தமும் கருதி ஆளப்பட்டுள்ளது. கண்ணின் முழுக்கோளம் வேள்விக் களத்திற்கும், கருவிழி வேள்வியமைப்பிற்கும், கண்மணி வேள்வி முனிவர்க்கும்,பெரிய மேலிமை இராமனுக்கும்,சிறிய கீழ்மை இலக்குவனுக்கும் உவமைகள்; கீழிமை ஆடாது நின்று கண்ணைக் காப்பதுபோல் இலக்குவன் வேள்விக் களத்தின் ஓரிடத்தில் நின்று

காத்தான் என்றும், மேலிமை முன்னும் பின்னும் ஆடிக் கண்ணைக் காப்பதுபோல் இராமன் வேள்விக்களத்தைச் சுற்றிவந்து காத்தான் என்றும், மேலிமை ஆடும்போது கீழிமையைத் தொட்டுச் செல்லக் கீழிமையும் சற்றே அசைவது இராமன் சுற்றிவரும்போது ஒவ்வொரு முறையும் இலக்குவனைத் தட்டி எச்சரிக்கை செய்ய அவனும் அதே எச்சரிக்கையோடு காத்திருத்தான் என்றும் உவமைக்கேற்ப இதில் நுணுக்கம் காண்பர்.

இவ்வாறு இராம இலக்குவர்கள் வேள்வி காக்கையில் அரக்கர்கள் வானத்தில்தோன்றிப் பேராரவாரத்தோடுபோர் புரியத் தொடங்கவும், இராமன் அவ்வேள்விக் களம் முழுவதையும் அம்பினாற் கூடமிட்டு, அக்களத்தினுள் குருதி சிந்தாமல் அவர்களையெல்லாம் கொன்று தீர்க்கின்றான். முன்பு இராமனால் கொல்லப்பட்ட தாடகையின் மக்களான சுபாகு, மாரீசர் என்ற அரக்கர்கள் இருவரும் இப்போது இந்த படைக்குத் தலைமையேற்று வந்தமையால், அவர்களுள் ‘ சுபாகுவை ஓரம்பினால் கொன்று, மற்றோரம்பினால் மாரீசனைக் கடலில் கொண்டு போய்த் தள்ளு தள்ளுகின்றான் இராமன். அது கண்ட மற்றையரக்கர்களும் அவனுக்காற்றாது அஞ்சியோடுகின்றனர்.

இனி, இப்போரில் சுபாகுவையும் பிற அரக்கர்களையும் கொன்று நீக்கிய இராமன் மாரீசனைக் கொல்லாமல், உயிரோடு தப்பிப்போகும்படி கடலிற் கொண்டு தள்ளியதற்கும் கதைப் போக்கில் காரணங் காணலாம். பின்னர், இராவணன் சீதையைக் கவர எண்ணுகையில், இராமனது ஆற்றலையும் அவனம்பினது திறத்தையும் சொல்லி அவ்விராவணனைஎச்சரிக்கவேண்டும். அதற்கு இராமனிடத்தில் அடிபட்டுத் தப்பிய ஒருவன் தேவை. அந்த ஒருவனாக மாரீசனைக் கருதி அவனை உயிரோடு விடவேண்டியுள்ளது. அதற்கேற்பவே மாரீசனும் இராவணனை இடித்துரைக்கும்போது, இராமனிடத்தில் தான் கண்ட பேராற்றலையும் அவன் படைக்கலப் பெருமைகளையும் கூறித் திருத்த முயலுகின்றான். அதனையும் கேளாமல் அழிவைத்தேடுகின்றான் இராவணன், அஃது அவனுக்கேயுரிய செருக்கு; அது நிற்க.

இராம இலக்குவர்களின் காவலில் தன் வேள்வியை இனிது முடித்த கோசிகன் இராமனைப் பாராட்டி முகமன் கூறிப் பின்னும்

அவனது திறமைக்குப் பெரியதோர் பரிசாகச் சீதையை அவனுக்கு மணமுடித்து வைக்க வேண்டுமென்று கருதி அக்கருத்தை வெளியிடாது அவர்களையழைத்துக்கொண்டு மிதிலை புறப்படுகின்றான்.

## அகலிகை சாபநீக்கம் : இராமன் கால்வண்ணம்

அவ்வாறு மிதிலை நோக்கிப் போகும்போதே முனிவன் இன்னொரு செயலையும் முடித்துவிட எண்ணுகிறான். அங்கொரு பெண் அகலிகை, இந்திரனின் வஞ்சனையால் தனக்கு ஏற்பட்ட கொடிய சாபத்திலிருந்து நீக்கம் பெறுவதற்காக இராமனுடைய திருவடித்தாமரைகளை எதிர்நோக்கி மிதிலைப் புறத்தே கல்லுருவில் காத்துக் கிடக்கின்றாளே, அவளுக்கு மறுவாழ்வளிக்க வேண்டுமல்லவா? அதனால் இராம இலக்குவர்களோடும் அவ்வழியே தவறாது போகிறான் கோசிகன். போகும்போது இராமனின் திருவடித் துகள்கள் பட்டமாத்திரத்திலேயே அகலிகை கல்லுருத் தவிர்ந்து இயற்கையான மெல்லுருக்கொண்டு எழுந்து பனிவுடன் ஒதுங்கி நிற்கின்றாள்,

கண்ட கல்மிசைக் காகுத்தன் கழற்றுகள் கதுவ
உண்ட பேதமை மயக்கற வேறுபட் டுருவம்
கொண்டு மெய்யுணர் பவன்கழல் கூடிய தொப்பப்
பண்டை வண்ணமாய் நின்றனள், மாமுனி பணிப்பான்.

(பால. அகலிகை.71)

அகலிகையை இராமனுக்கு அறிமுகப்படுத்துகின்றான் கோசிகன். ‘தீவினை நயந்து செய்த தேவர்கோன் தனக்குச் செங்கண், ஆயிரம் அளித்தோன் பன்னி–அகலிகை’ என்று அவன் கூறியதைக் கேட்டவுடன் திகைப்போடு அந்த வரலாற்றை வினவுகின்றான் இராமன். உடனே, முன்னர்க் கோதமனுருவில் அகலிகையிடம் சென்ற இந்திரனின் வஞ்சனையையும், தன் கணவனென்று நம்பி அவனுடன் கூட்டத்திற்கிணங்கித் தாழ்ந்த அகலிகையின் ஏமாற்றத்தையும், இருவர் செயலையும் அறிந்து ‘ஆயிரம் மாதர்க்குள்ள அறிகுறி உனக்குண்டாக’ என்று இந்திரனுக்கும், ‘கல்லியல் ஆவாய்’ என்று அகலிகைக்கும் கொடுதத் கோதமனின் சாபங்களையும், பின் அவ்விருவர் வேண்டுகோட்

கிணங்கி 'ஆயிரம் கண்ணாக' என்றும், 'இராமன் திருவடித் துகளால்–கல்லுரு நீங்குக' என்றும் முறையே மாற்றிக் கொடுத்த அம்முனிவனின் சாபவிடையையும் கூறி முடித்த கோசிகன்,

> இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம் இனியிந்த வுலகுக் கெல்லாம்
> உய்வண்ண மன்றி மற்றோர் துயர்வண்ணம் உறுவ துண்டோ?
> மைவண்ணத் தரக்கி போரில் மழைவண்ணத் தண்ண லேயுன்
> கைவண்ணம் அங்குக் கண்டேன் கால்வண்ணம் இங்குக் கண்டேன்
>
> (பால, அகலிகை. 82)

என்று இராமனைப் புகழ்ந்து பாடுகின்றான். அது மெய்; இராமனுக்கு இத்தகைய கால்வண்ணம் எப்படியமைந்தது? அகலி கையின் கல்லுரு நீக்கத்திற்கு ஏன் இவனுடைய திருவடித்துகள் களைத் தேர்ந்து சாபவிடை தந்தான் கோதமன்? பிறன்மனை நயந்த இந்திரனின் வஞ்சனை வலையில் சிக்கி ஏமாந்த அகலி கையின் தீவினைக்குத் தன் மனைவியன்றி வேறு பெண்கள் எவரையும் சிந்தையாலும் நாடாத சீரிய ஒழுக்கத்தை மேற்கொள் ளப்போகும் இராமனின் திருவடித் துகள்களே அருமருந்து என் பதால்தான் கோதமன் அங்ஙனம் தேர்ந்து சாபவிடை தந்தான். அதனையே கோசிகனும் வியந்து பாடுகின்றான்.

தன்னையொரு பெண்ணுக்குக் கொடுத்துத் தானோர் இல்லறத்தைத் தொடங்கப் போகுமுன், தன் திருவடிகளையொரு பெண்ணுக்குக் கொடுத்து வேறோர் இல்லறத்தின் சிக்கலைத் தீர்க்கின்றான் இராமன். இதுவே அகலிகை சாபநீக்கத்தின் உட்கிடக்கை.

### *சீதைத் திருமணம்*

இந்த மிதிலைப் பயணத்தின் உச்ச கட்ட நன்மையாகக் கோசிகன் இராமனுக்கு ஏற்படுத்தித் தருவது சீதைத் திருமண மேயாம். இந்தத் திருமணத்தில் இவனோர் இடைநிலையாளனாய்த் திகழ்கின்றான். முதலில் இராமன் சீதையைக் கண்டு காதல் கொள்வதற்கேதுவாய் அவளுடைய கன்னி மாடமுள்ள அரச வீதி வழியே அவனை அழைத்துப் போகின்றான். அங்கு அவர்களுக்கு

இடையில் கண்வழிக் காதல் நிகழ்ந்ததைத் தொடர்ந்து சனகனிடத்திற்கு அழைத்துப்போய் அறிமுகப்படுத்துகின்றான். அந்த அறிமுகத்திலேயே அவனது உட்கிடக்கை முழுவதும் வெளிப்பட்டு நிற்கின்றது,

இருந்தகுலக் குமரர்தமை இருகண்ணும் முகந்தழகு
பருக நோக்கி
அருந்தவனை அடிவணங்கி யாரிவரை உரைத்திடுமின்
அடிகள் என்ன
விருந்தினர்கள் நின்னுடைய வேள்விகா வியவந்தார்
வில்லுங் காண்பார்
பெருந்தகைமைத் தயரதன்றன் புதல்வரென அவர்
தகைமை பேச லுற்றான்
(பால.மிதிலைக்காட்சி,157)

'நின்னுடைய வேள்வி காணிய வந்தார்' என்று கூறியவன், அடுத்து 'வில்லும் காண்பார்' என்று கூறுகின்றான். வில்லை வளைத்துச் சீதையை மணக்கும் பொருட்டே இராமனை அழைத்து வந்திருக்கும் உண்மையை – இதுவரை இராமனிடத்திலும் சொல்லாத மறை பொருளை–முதன்முறையாக இங்கு இப்போது சனகன் முன்னிலையில் வெளியிடுகின்றான். இதனையும் இராமன் முழுவதும் விளங்கிக் கொள்ள முடியாதபடி சனகனுக்கும் அவனைச் சார்ந்தோருக்கும் மட்டும் விளங்கும் குழூச்சொல்போல் பேசுகின்றான். இந்தப் பேச்சிலிருந்து தனக்கு ஏதோ ஒரு வில் காத்திருக்கிறது என்று மட்டுமே இராமனுக்கு விளங்கியிருக்கும். அதற்குமேல், தான் காணப்போகும் அந்த வில்லின் பின்னணியில் தன்னை நோக்கிச் சீதையென்ற பெண்ணொருத்தியும் காத்திருக்கின்றாள் என்ற உண்மையை அப்போதைய நிலையில் அம்முனிவனின் சுருக்கமான பேச்சிலிருந்து அவன் எப்படி விளக்கிக் கொண்டிருக்க முடியும்?

அந்நிலையிலேயே கோசிகன் சனகனுக்கு இராமனின் குலமுறையினையும் அவனுடைய பெருமைகளையும் விரிவாகக் கிளந்து முடிக்கவும், அதைக்கேட்ட சனகன் கூறுவான்:

'மாற்றம்யா துரைப்பது மாய லிற்குநான்
தோற்றவா றெனமனம் துளங்கு கின்றதால்
நோற்றனன் நங்கையும் நொய்தின் ஐயன்வில்
ஏற்றுமேல் இடர்க்கடல் ஏற்றம் என்றனன்
(பால.கார்முக.1)

இதைக்கேட்டவுடன்தான் இராமனுக்கு அந்த உண்மை ஓரளவு பிடிபட்டிருக்கும். அடுத்து, சனகனின் ஏவலில் பலர் அவ்வில்லை அங்குக் கொண்டுவரவும், அம்மன்னனின் குறிப்பறிந்து அருகிலி ருக்கும் சதானந்த முனிவன் அவ்வில்லின் வரலாற்றையும் அதனை வளைப்போருக்குப் பரிசாகவுள்ள சீதையின் வரலாற்றையும் கூறி இராமன் அதனை வளைத்தால் சீதையின் நலம் பழுதாகாமல் அவனைச் சேருமென முடிக்கின்றன். அவன் சொன்னதையெல்லாம் கேட்டிருந்த கோசிகன் குறிப்பாக இராமனை நோக்க, அக்குறிப்பு நோக்கின் பொருளையுணர்ந்த இராமனும் அதே பொருளாழத் தோடு அவ்வில்லை நோக்குகின்றான். அவ்வளவுதான்! அவன் எழுந்த சீற்றமென்ன, நடந்த தோற்றமென்ன, எடுத்த எளிமை யென்ன, ஒடித்த வலிமையென்ன! இவையனைத்தும் கம்பரால் அழகுறப் புனையப்படுகின்றன.

சிவனுடைய இந்தப் பெருவில்லை ஒடித்த நிகழ்ச்சிக்குப்பின் இராமனது புகழ் முன்னையிலும் பன்மடங்காக உயர்ந்து பரவு கின்றது. இப்போது கோசிகன் அவனுக்குத் தந்தை நிலையிலேயே வைத்துச் சனகனால் பேசப்படுகின்றதைக் காண்கிறோம். காரணம் என்ன? இங்கு வள்ளுவரின் கருத்தை நோக்க வேண்டும்.

> 'தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
> முந்தி இருப்பச் செயல்'
>
> (குறள்.67)

இந்த முறையில் இராமனது பேராற்றலைச் சனகனது அவையில் கொணர்ந்து வெளிப்படுத்தி அங்கே எல்லோருடைய முன்னிலை யிலும் அவனை உயர்த்திவிட்டவன் கோசிகன் என்ற காரணம் பற்றியே சனகன் அவனை இராமனுக்குத் தந்தையாகப் பேசு கின்றான். முன்பு தயரதன் இராமனை ஒப்படைக்கையில் 'தந்தை நீ' என்று கொடுத்த பொறுப்பைக் கோசிகன் செம்மையுறச் செய்துளான் என்பதற்கு இன்று சனகனின் இந்தக் கூற்றே சான்றாகவுள்ளது.

> உரைசெய்எம் பெரும உன் புதல்வன் வேள்விதான்
> விரைவினின் றொருபகல் முடித்தல் வேட்கையோ?
> முரசெறிந் ததிர் கழல் முழங்கு தானையவ
> அரசையும் இவ்வழி அழைத்தல் வேட்கையோ?
>
> (பால.கார்முக.65)

என்று சனகன் வினவியதையேற்று, அயோத்தியிலிருந்து தயரதன் முதலியோரையும் வரவழைத்து இராமனுக்குச் சீதையின் திருமணத்தை முடிக்கின்றான் கோசிகன். முடித்து அவளோடும் அவனைத் தயரதனிடம் ஒப்படைத்து வாழ்த்திவிட்டுத் தான் வந்த குறிக்கோளையெல்லாம் நிறைவேற்றிய பெருமிதத்தோடு தன் இருப்பிடமான இமயத்திற்குத் திரும்புகின்றான்.

*முடிப்பு*

அன்று கோசிகனுடன் இராமனை அனுப்புவதற்குத் தயக்கம் காட்டிய தயரதனிடம், 'நின் மகற்கு உறுத்தலாகலா உறுதி எய்தும் நாள் மறுத்தியோ?' என்றும், 'ஐய! நின் மகற்கு அளவில் விஞ்சை வந்து, எய்து காலம் எதிர்ந்ததாம்' என்றும் வசிட்டன் இன்று கூறியதைப் பார்த்தோம், அவையெல்லாம் இந்த மிதிலைப் பயணத்தில் இராமனுக்குக் கைகூடினமையை இன்று காண்கின்றோம். மேலே குறிப்பிட்டவை அன்றியும் இன்னும் பல வரலாறுகளையெல்லாம்கூட இடையிடையே கோசிகன் மூலம் இராமன் அறிந்து கொண்டான். இராமாவதாரக் கட்டடத்திற்கு இந்த மிதிலைப் பயணமே அடித்தளமாய் அமைந்து தாங்குகின்றது என்ற அளவில் இதனை முடிப்போம்.

# மூவர் தேவாரங்களில் தமிழ் உணர்வு

பேரறிஞர் தா. ஈசுவரபிள்ளை

பல்வேறு சமுதாய, பொருளாதார, சமய, அரசியல் காரணிகளால் அல்லலுற்று வாழ்ந்த தமிழக மக்களை, இறைவனிடம் அன்பு செலுத்துதல் என்ற உயரிய குறிக்கோளுடன், தூய நெறியில் அழைத்துச் சென்று, அவர்களின் வாழ்க்கை மேம்பாடடைய, சமத்துவச் சமுதாயம் மலர முயன்றவர்கள் பக்தி இயக்கச் சான்றோர்கள் ஆவர். சாதி அடிப்படையிலும், பொருளாதார நிலையிலும், சமய நோக்கிலும் தாழ்நிலையுற்று, தங்களுக்கு உயர்வு வராதா என ஏங்கித் தவித்த மக்களிடையே பக்தி இயக்க அருளாளர்கள் தோன்றி இறைவனின் முன்னர் அனைவரும் சமம். எல்லோருக்கும் இறைவனை வழிபட உரிமை உண்டு; இல்லறத்தில் நல்வாழ்க்கை வாழ்ந்து கொண்டே இறைத்தொண்டு செய்யலாம் என்பன போன்ற கருத்துக்களைக் கூறி மக்கள் மனத்தில் நம்பிக்கை விளக்கை ஏற்றினர். சமண சமயங்களுக்கு எதிராக, சைவ, வைணவ சமயங்களை வளர்க்கத் தோன்றிய பக்தி இயக்க அருளாளர்கள் பல்வேறு நடைமுறை உத்திகளைக் கையாண்டனர், மக்கள் அனைவரையும் சமமாக மதித்தல், பெண்களுக்கு ஏற்றம் அளித்தல், வழிபாட்டு முறைகளை எளிமையாக்கல், கடுமையான கட்டுப்பாடுகளை உடைத்தல், வட்டாரப்பற்றை ஊட்டல், மொழி உணர்வை ஊட்டல் முதலியன அவர்கள் கையாண்டுள்ள உத்திகளுள் சிலவாகும். இவண், மூவர் தேவாரங்களில் காணப்பெறும் மொழி உணர்வு பற்றிச் சிறிது காண்போம்,

## *தமிழ்ப்பற்று*

தமிழக மண்ணில் தோன்றி, தமிழக மக்களிடையே பழகி தமிழர்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்காகப் பாடுபட்டவர்கள் தேவார மூவர்கள். அவர்கள் இறைவனைத் தமிழாகவும், தமிழ் மொழியைக் கடவுளாகவும் போற்றி மதித்தவர்கள். எனவே,

அவர்களுடைய பனுவல்களில் இறையுணர்வுடன் இணைந்த நிலையில் தமிழ் உணர்வும் ஒன்றிநிற்கின்ற தன்மையை நாம் அறிய முடிகின்றது.

### பதிகங்களைத் தமிழ் என்றல்

இறைவனின் அளத்தற்கரிய பெருமைகளையும், அருட்குணங்களையும், தீயனவற்றை அழிக்கும் திறனையும் அடியார்களுக்கு அருளும் திறங்களையும் போற்றிப் புகழும் தேவார' மூவர்கள் தங்கள் திருப்பாடல்கள் அடங்கிய பதிகங்களைத் 'தமிழ்' என்றே சுட்டுகின்றனர். அவ்வாறு சுட்டுவதோடு அமையாது பல்வேறு அடைமொழிகளையும் அமைத்துப் போற்றுகின்றனர். ஆறா அருந்தமிழ் மாலை, இசை மலி தமிழ், இன்னிசைச் செந்தமிழ் எனத் தமிழ் மொழியின் பல்வேறு சிறப்புக்களும் பெருமைகளும் வெளிப்படும் வண்ணம் அடைமொழிகள் கொடுத்துப் போற்றப்பெறுமாற்றைக் காணலாம்.

### தம்மைத் தமிழோடு தொடர்பு படுத்தல்

தாம் இயற்றியருளிய பதிகங்களைத் தமிழாகக் கருதிய அருளாளர்கள் தம்மையும் தமிழுடன் தொடர்புபடுத்திக் கூறுவதையும் காணமுடிகின்றது. சம்பந்தர் பெருமான் தம்மை அருந்தமிழ் ஞானசம்பந்தன், இசை ஆர் தமிழ் விரகன், இன்தமிழ் நவிலும் ஞானசம்பந்தன், சந்தம் நிறை தண்தமிழ் தெரிந்து உணரும் ஞானசம்பந்தன் செந்தமிழ். ஞானசம்பந்தன் என்றும், சுந்தரர் பெருமான் தம்மை அருந்தமிழ் ஊரன், உள்ளம் குளிர் தமிழ் ஊரண், பொய்யாத் தமிழ் ஊரண் என்றும் பெருமையுடன் தமிழோடு இணைத்துக் கூறுகின்றனர்.

### இறைவனைத் தமிழோடு தொடர்பு படுத்தல்

சிவபெருமானைத் 'தமிழன்' என்றும், ''முத்தமிழும் நான் மறையும் ஆனான் கண்டாய்'' என்றும், ''பண் இடைத் தமிழ் ஒப்பாய்'' என்றும், ''தண் தமிழ் நூல் புலவாணர்க்கு அம்மானே', என்றும், ''பண் ஆர் இன் தமிழாய்'' என்றும், ''தமிழோடு இசை கேட்கும் இச்சையால் காசு நித்தம் நல்கினீர்' என்றும் பன்னல் அம் தமிழால் பாடுவேற்கு அருளாய்'' என்றும் தமிழுடன் தொடர்புபடுத்தி. இறைவனின் பெருமைகளையும் அருளும் திறனையும் புலப்படுத்துகின்றமையை அறியலாம்.

## ஊர்ச்சிறப்புகளுடன் தொடர்புபடுத்தல்

''செந்தமிழ் பரப்பு உறு திருப்புகலி'' என்றும், ''திணை கொள் செந்தமிழ் பைங்கிளி தெரியும் செல்வத் தென்திருநின்றியூரானே'' என்றும் ஊர்ச்சிறப்புக்களைக் கூறுங்கால் தமிழின் பெருமைகளையும் இணைத்துக் கூறும் நிலையை அறிய முடிகின்றது.

## பிற அடியார்களின் தமிழ்ப்பற்றை உணர்த்தல்

சுந்தரர் பெருமானின் ''நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்'' ''நல்லிசை ஞானசம்பந்தனும் நாவுக்கு அரையரும் பாடிய நல்தமிழ் மாலை'' என்ற அடிகள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோரின் தமிழ்ப்பற்றை உணர்த்துகின்றன.

இவ்வாறு மக்களுக்கு இறையுணர்வு ஊட்ட, இறைவன் பெருமைகளை உணர்த்த, சமத்துவச் சமுதாயம் உருவாக, மக்கள் வாழ்வாங்கு வாழப் பக்திப் பனுவல்களை இயற்றிய தேவாரப் பனுவல்களில், தேவார மூவர்கள் ஏற்ற இடங்களில் எல்லாம் தமிழின் பெருமைகளையும் சிறப்புக்களையும் எடுத்துக் கூறக் காணலாம். இதன்மூலம் அருளாளர்களின் தமிழ் உணர்வு வெளிப்படுவதுடன், தமிழ் மக்களிடையே தமிழ் உணர்வு ஊற்றெடுக்க வழி செய்வதையும் அறியலாம். தேவார மூவர்களில், அன்னையாகிய உமாதேவியாரிடம் ஞானப்பால் பெற்ற திருஞானசம்பந்தர் பெருமானின் திருப்பாடல்களில் தமிழ் பற்றிய குறிப்புக்கள் விஞ்சி நிற்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# மதுரைத் தமிழ்ச் சங்கச் சுவடிகள்

—கி. ஜெயகுமார், மொ. மருதமுத்து

எளிதில் கணிக்க முடியாத தொன்மை நிறைந்தது தமிழ் மொழி. இம்மொழிக்கண் திகழும் இலக்கியங்கள், இலக்கணங்கள், மருத்துவ நூல்கள், சாத்திரங்கள் முதலியன சுவடிகளில் எழுதப் பெற்று நமக்கு இன்றளவும் கிடைத்து வருகின்றன. இவற்றுள் பல நமது முன்னோர்களின் பொறுப்பின்மையாலும் அறியாமை யாலும் கரையானுக்கும், நெருப்புக்கும், வெள்ளத்திற்கும் இரை யாயின, அத்தகு நிலையில் இழந்தது போக நமக்குக் கிடைப்பன சில சுவடிகளே ஆகும், அவற்றையேனும் பொருத்தமுறப் பாது காத்தல் நமது கடமையாகும். அவ்வகையில் தமிழை வளர்க்கப் புறப்பட்ட நான்மாடக்கூடலிலே அமைந்த நான்காம் தமிழ்ச் சங்கத் தின் பணி அளவிடற்கரியது.

## மதுரைத் தமிழ்ச்சங்கம்

கடைச் சங்கமாம் மூன்றாம் சங்கம் இருந்த மதுரையிலேயே நான்காம் தமிழ்ச் சங்கத்தையும் பொருத்தமுறத் தொடங்கித் தமிழ் வளர்க்க முனைந்த தமிழ்ச்சங்க நிறுவனர் சேதுபதி அரச மரபினர் வள்ளல் பொன் பாண்டித்துரைத்தேவர் அவர்கள் தமிழின்பால் கொண்ட எல்லையில்லாப்பற்றின் காரணமாக அழிந்துபட்டு வரும் தமிழ்ச் சுவடிகளைப் பாதுகாத்தல், அவற்றைப் பதிப்பித்தல் ஆகிய பணிகளைச் சங்கத்தின் குறிக்கோளாகக் கொண்டு செயலாற்றினார்,

இத்தமிழ்ச் சங்கத்தின் (14-9-1901) ஒன்பது நோக்கங் களுள் இரண்டு, மூன்றாம்தீர்மானங்களாக,

'இறவாதுள்ள தமிழ் ஏடுகளையும் அச்சிட்ட நூல்களையும் தேடிப் பெற்றுப் பலருக்கும்பயன்படுமாறு தொகுத்து வைத்தல்'.
'வெளிவராத அரியநூல்களை ஆராய்ந்து அச்சிட்டுப் பரப்புதல்'.

ஆகியவை அமைந்துள்ளன. இவற்றிலிருந்து தமிழ்ச்சங்கம் அரிய சுவடிகளுக்கு எத்துணை முக்கியத்துவம் கொடுத்தது என்பதை அறிய முடியும். அவ்வகையில் சங்கத்தோடு தொடர்புடைய பெரியோர் களால் ஏராளமான தமிழ் அறிஞர்களால் ஓலைச்சுவடிகள் படிப் பதற்கும் பிரதி எடுப்பதற்கும் பிற பிரதிகளோடு ஒப்பு நோக்கவும் வேண்டி இங்குப் பாதுகாக்கப்பட்டன.

*சங்க ஓலைச் சுவடிகளின் பழைமை :*

சங்க ஓலைச் சுவடிகள் அவற்றின் வரிவடிவம் கொண்டு நோக்கும் பொழுதும், பழைமை கொண்டு நோக்கும் பொழுதும் ஏறத்தாழ இன்றைக்கு முந்நூறு ஆண்டுகளுக்கும் முற்பட்டவை என்பதை அறிய முடிகிறது. அனைத்து வகையான இலக்கியங்களும் பிற சாத்திரங்களும் தமது சங்கத்தில் இருக்க வேண்டும் என்கிற முனைப்போடு வள்ளல் அவர்கள் சுவடிகளாக அவற்றைச் சங்க நூலகத்தில் தொகுத்து வைத்துள்ளார்..

தொல்காப்பியம் முதல் சிற்றிலக்கியங்கள் வரையிலும் சமய பேதங்கள் ஏதுமின்றித் தமிழ் இன்பம் துய்த்தல் என்பதையே முதன்மையாகக் கொண்டு சங்கத்தில் சுவடிகள் தொகுக்கப் பெற்றுள்ளன. மேலும், தமிழ் இலக்கியத்தின் வளமையை அறிவ தற்கும் வளம் சேர்ப்பதற்கும் உதவ வல்ல வடமொழி, இந்தி, தெலுங்கு, ஆகிய மொழி ஏடுகளும், கிரந்த எழுத்தில் அமையப் பெற்ற தருக்க சாத்திர ஏடுகளும் இங்குக் காணப்படுகின்றன.

*அருங்கருவூலம் :*

தமிழ்ச்சங்க நூலகத்தில் காணப்படும் சுவடிகளில் பல பதிப்பிக்கப் பெற்றும், சில பதிப்பிக்கப் பெறாதும் திகழ்கின்றன. பதிப்பிக்கப் பெறாத அனைத்துச் சுவடிகளுமே கால வெள்ளத்தில் அழியுமுன்பு பதிப்பிக்கப் பெறவேண்டிய அரிய கருவூலங்களாகத் திகழ்கின்றன.

காட்டாக, தில்லையந்தாதி, இறையனார் அகப்பொருள் துறைகளுக்கு மேற்கோள் பாடல்களாகக் காட்டப்படும் பழனிக் கோவை, பார்த்த சாரதிமாலை, உரை நடையும் பாட்டும்

சுலந்த மாகஸ்தான புராணச் சுருக்கம், உப்பூர் வெயி லுகந்த விநாயகர் புராணம், விநாயகர் மற்றும் பிற தெய்வங் கள் மீது பாடப்பெற்ற வண்ணவகை இலக்கியத்தைச் சார்ந்த பாடல்கள், சண்முகனந்தாதி, குருக்குத்துறை குமரன் பேரில் கும்மி, திருப்புல்லாணி தெய்வச்சிலையார் மீது பாடப்பெற்ற பல வகை சிற்றிலக்கியங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம், மேலும் பல அரிய மருத்துவச் சுவடிகள், சித்தாந்த உரைகள், சோதிட நூல்கள், நாலாயிர திவ்வியபிரபந்தத்திற்கு எழுந்த மணிப்பிரவாள உரைகள் போன்றனவும் பதிப்பிக்கப் பெறாத நிலையில் ஈங்கு உள்ளன,

பாடபேதம் அறிதல், பதிக்கப் பெற்று வெளிவந்த நூல்களில் முழுமை பெறாது விடுபட்டுப் போன பாடல்கள், வரிகள், சொற்கள் ஆகியவற்றை மீண்டும் இட்டு நிரப்புதல் ('குருகை மான்மியம்' என்கிற அச்சிட்ட நூலில் விடுபட்ட சில பாடல்கள், சொற்கள் ஆகியன இச்சங்க ஏட்டில் உள்ளன) ஆகியவற்றுக்குத் தமிழ்ச் சங்கச்சுவடிகள் பேருதவி புரிகின்றன.

## தமிழ்ச்சங்கச் சுவடிகளின் இலக்கியப் பிரிவுகள் :

சங்க இலக்கியங்கள், நீதி இலக்கியங்கள், பக்தி இலக் கியங்கள் ஆகியன மிகவும் குறைவாகவே இங்குக் காணப்படு கின்றன. எஞ்சிய சுவடிகளைக் கீழ்க்கண்டவாறு இனங் காண லாம். இலக்கணம் 10 விழுக்காடு, தலபுராணங்கள் 25 விழுக்காடு, காப்பியங்கள் 5 விழுக்காடு, சிற்றிலக்கியங்கள் 30 விழுக்காடு, மருத்துவம் 15 விழுக்காடு, தத்துவம் 5 விழுக்காடு பிற வகையின 10 விழுக்காடு (கணக்கு, கிரந்தம், மணிப்பிரவாளம், வடமொழி, இந்தி) என அவை அமைந்துள்ளன.

இவற்றுள் பெரும்பாலும் இலக்கணங்கள். தத்துவங்கள் அகிய சுவடிகள் உரையாசிரியர்களின் உரைக்குறிப்புகளுடன் காணப்படுகின்றன. காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள் ஆகியன வற்றுள் ஒரு சில உரை பெற்றும் பல உரை பெறாதும் உள்ளன, எஞ்சிய வகை சார்ந்த இலக்கியங்கள் பெரும்பாலும் மூலம் மட்டுமே பெற்றுள்ளன.

*பதிப்பு நிலையில் சுவடிகள் :*

மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் சுவடிகள் பல தமிழ்ச் சான்றோர் களால் ஆய்வு செய்யப் பெற்றுப் பதிப்பிக்கப்பட்டுள்ளன. உதா ரணமாக 'சிவகங்கைச் சரித்திர அம்மானைக் கும்மி' என்னும்பதிப்பு நூலானாது இச்சங்கத்திலிருந்து பெறப்பட்ட சுவடியை ஆதார மாகக் கொண்டு வெளியிடப் பெற்றதாக அதன் பதிப்பாசிரியர் T. சந்திரசேகரன் குறிப்பிடுகிறார் (T. சந்திரசேகரன், அரசு கீழ்த் திசைச் சுவடி நூலக வெளியீடு, 1954, ப.Viii).

'தமிழ்ச் சங்க முத்திராசாலை' என்ற பெயருடன் அமைந் திருந்த சங்க அச்சகத்தின் மூலம் பல தமிழ்ச் சுவடிகள் அச்சிடப் பெற்றுள்ளன. தமிழ்ச் சங்க வெளியீடாக வந்த திருநூற்றைந்தாதி, திருக்கலம்பகம், பாப்பாவினம், பழனி பிள்ளைத் தமிழ், மகாபாரதம் அரும்பதவுரையுடன், தொல்காப்பியம்-செய்யுளியியல்-நச்சினார்க் கினியர் உரையுடன், திருவருணைக் கலம்பகம், திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலிய நூல்களுக்கு ஆதாரமாய் அமைந்தவை சங்கத்துச்சுவடிகளே ஆகும். இவை இன்றும் சுவடி நிலையிலும் இங்குப் பாதுகாக்கப் பட்டு வருகின்றன.

சங்கச் சுவடிகளை ஒப்பு நோக்கி ஆய்வு செய்து பதிப்பித்த ஆய்வாளர்களாக மு. ராகவையங்கார், கா. கோபாலாச்சாரியார், பூ. கலியாண சுந்தர முதலியார். ரா. ராகவையங்கார், உ. வே. சாமிநாத ஐயர், அருணாசலக் கவிராயர் ஆகியோர் சிறப்பாகக் காணப்படுகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

*சுவடிகளின் இன்றைய நிலை*

சங்கம் நிறுவிய ஆண்டிலிருந்து பலப்பல சுவடிகள் நூலகத் தில் தொகுக்கப் பெற்றன. அரிய நூல்களைத் தமிழ்கூறும் நல்லுல கத்திற்கு அறிமுகம் செய்யவேண்டும் என்றநோக்கத்தில் தொடங்கப் பெற்ற இப்பணி இக்காலம் வரையிலும் தடையில்லாதுநடந்தேறி வந்துள்ளது. 1930-ஆம் ஆண்டு சங்கச் சுவடிகள் எல்லாம் அட்டவணை படுத்தப்பட்டு எண்ணும் கொடுக்கப் பெற்றன என்ப தையும் அதன்வழி சங்கத்தில் 560-க்கும் மேற்பட்ட சுவடிகள் இருந்தன என்பதையும் அறிய முடிகிறது. இவை மேலும் பாதுகாப் பாகவும் கையாள எளிமையாக இருக்க வேண்டியும் கருதி, சுவடி

கள் முன் பின்னாகத் துளையிடப்பட்டு மரச் சட்டங்களுடன் நூலால் கட்டப்பட்டுள்ளன. முகப்புச் சட்டத்தில் வெள்ளை வண்ணத்தில் நூல் தலைப்பு எழுதப்பட்டுள்ளது.

இத்தகு மேன்மை கொண்ட சுவடிகள் காலத்தின் நீட்சி காரணமாகவும், கவனக்குறைவு காரணமாகவும் இராமபாண பூச்சியின் தாக்குதலுக்கு ஆளாகி சிறிது சிறிதாகச் சிதைந்து கொண்டு இருக்கின்றன. இவற்றை விஞ்ஞான மேம்பாட்டு நிலையில் பல கருவிகள் கொண்டு பதப்படுத்திப் பாதுகாக்க வேண்டும். அங்ஙனம் செய்யின் இன்னும் பல தலைமுறையினருக்கு இச்சுவடிகள் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

சங்கத்தின் வழி தமிழ்க் கல்லூரி மிகவும் சிறப்புற நடத்தப்பட்டு வருவது போல, பதிப்பில் வராத சுவடிகள், அரிதாக கிடைக்கும் நூல்கள் இவைகளெல்லாம் பதிக்கப்பெற்றுத் தமிழக ஆய்வாளர் கையில் கிடைக்க வழிவகை செய்தால் சங்க நிறுவனர் வள்ளல் பாண்டித்துரைத்தேவர் அவர்களின் கனவு நனவாகும்.

# பாரதப் பெருமையில் சேதுபதிகள்

முகவை- நா. தினகரசாமி

சிங்க வாகன
சேதுபதி ராணி
இந்திரா தேவி

மங்காத புகழோடு
எங்கும் தமிழ் வளர்க்கும்
மதுரைத் தமிழ்ச் சங்கத்தில்
தலைவி.

வள்ளல் மகான் சேதுபதி
பாண்டித் துரைத் தேவரவர்
ஆக்கி வைத்த தமிழ்ச்சங்கத்தை
ஊக்கி வைத்துக் காத்து வந்தார்
மன்னராம் பாஸ்கர சேதுபதி.

சுவாமியாம் விவேகானந்தரை
வெளி நாட்டினுக்கு அனுப்பியே
இந்துமதப் பெருமையைச் சொல்லி
சந்ததி காத்த மன்னரிவர்.

அருள் கொளிக்கும் ராமேஸ்வரத்தின்
அறக்காவலராகப் புகழ் பெற்ருர்
மன்னராம் ராமநாத சேதுபதி.

மக்கள் மனம் மாறாது
மகிழ்ச்சியான ஆட்சியைக் கண்டு
ஸ்ரீ ராம மிரான் பிராட்டியாருடன்
ராமலிங்க விலாச அரண்மனையில்
அன்புடன் தங்கி விட்டார்
அயோத்தியை விட்டு வந்து.

இன்றும் தங்க வைத்த பெருமை
இம் மன்னராம் சேதுபதிக்கு உண்டென
பாடுவோமே! வாழ்த்துவேமே!!

முதல்வன் ஸ்ரீராமனைக் காணவே
முகவை நகரைச் சுற்றியே!
பூக்கள் சிந்தும் வீதியில்
மக்கள் வெள்ளம் பாயுது!!

## எழுவகைக் குற்றங்கள்

1. உழைப்பின்றி வரும் செல்வம்
2. மனச்சான்று அற்ற இன்பம்
3. ஒழுக்கம் இல்லா அறிவு
4. நேர்மை இல்லா வாணிபம்
5. மனிதப்பண்பு அற்ற அறிவியல்
6. தொண்டு செய்யா வழிபாடு
7. கொள்கை அற்ற அரசியல்

—காந்தியடிகள்

தொகுப்பு : பொறுப்பாசிரியர்

திருப்பதி பிரிண்டர்ஸ், மதுரை-1.